வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 187 | பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# செம்மணி சாட்சியங்களை சிதைத்து அழிக்க முயற்சி!

## சி.வி.விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு


யாழ்ப்பாணம், ஜூலை 06

**செம்மணி புதைகுழி சாட்சியங்களை சிதைத்து அவற்றை அழிக்கப் படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மனித உரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணியில் ஒரு கூட்டுப் புதைகுழி தோண்டி எடுக்கப்பட்ட சம்பவம், மனித உரிமைகள் மற்றும் போரின் போது அப்பாவி தமிழ் மக்களின் அவலநிலை குறித்து அக்கறை கொண்டவர்களின் மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஜூலை 1998 இல், தமிழ் பள்ளி மாணவி கிருஷாந்தி குமாரசாமியின் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலையில்



ஈடுபட்டதற்காக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு தண்டனை

15



## அரியாலை மனிதப் புதைகுழியின் புதிய பகுதியில் மண்டையோடு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 06

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப் பட்டு அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பகுதியில் இருந்து நேற்று மண்டையோடு ஒன்று அடையாளம் காணப் பட்டுள்ளது.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப்

15

## மீண்டும் விசாரணைக்கு வரவுள்ள 1,000 இற்கும் மேற்பட்ட வழக்குகள்!

கொழும்பு, ஜூலை 06

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பான 1,000 இற்கும் அதிகமான வழக்குகள் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பான 1,000 இற்கும் அதிகமான முறைப் பாடு மற்றும் விசாரணை கோப்புக்களை இலங்கை பொலிஸ்துறையின் பல்வேறு முக்கிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு, அவற்றை மீண்டும் திறந்து விசாரணைகளை தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு,

15

## "அமைச்சர் பிமல் பதவியிலிருந்து விலகவேண்டும்"

கொழும்பு, ஜூலை 06

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதவி விலக வேண்டும் என பொது ஜன பெரமுன கட்சியின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

மொட்டு கட்சி

15

## சித்துப்பாத்தி புதைகுழியில் மேலும் 3 எலும்புக்கூடுகள்!

### இதுவரை 45 எலும்புத் தொகுதிகள் அடையாளம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 06

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது மேலும் மூன்று எலும்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப் பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 45 மனித எலும்புத் தொகுதிகள் அடையாளம்

15

## முக்கிய நபர்களின் 488 கோப்புக்கள் குறித்து விசாரணை ஆரம்பித்த இலஞ்ச ஒழிப்புத்துறை

கொழும்பு, ஜூலை 06

உயர் பதவியில் உள்ளவர்களின் 488 கோப்புக்கள் தொடர்பான விசாரணைளை இலஞ்ச ஒழிப் புத்துறை தொடங்கியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயர் பதவியில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் மூத்த அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக் களை எதிர்கொள்ளும் நபர்கள் தொடர்பான 488 கோப்புக்கள் குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைகளை தொடங்கியுள்ளது.

இந்த முறைப்பாடுகள் ஜனாதிபதி செயலகம், பல்வேறு அமைச்சுகள் மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறைக்கு நேரடியாகப் பெறப்பட்டதாகத் தெரிய வருகின்றது. அவற்றில் சிலவற்றுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியும்

15

## செம்மணி புதைகுழி விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம்

### ஒன்ராறியோ மாகாண அமைச்சர் விஜய்

ஒன்ராறியோ, ஜூலை 06

யாழ்ப்பாணம் - செம் மணியில் கண்டுபிடிக்கப் பட்ட மனித புதைகுழிகள் மற்றும் இனப்படுகொலை குறித்து, சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, இனப்படுகொலையாளர்கள் தங்களைத் தாங்களே விசாரிக்க முடியாது என்பதால், அவசரமான சர்வதேச தலையீடு அவசியம் என, கனடாவின் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் விஜய் தணிகாசலம் எக்ஸ் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

கிருஷாந்தி குமாரசுவாமி கொலையுடன் தொடர்புடைய, சிப்பாயின் வாக்குமூலத்தில், நூற்றுக்கணக்கான தமிழ் பொதுமக்கள் புதை குழிகளில் புதைக்கப் பட்டிருப்பதாகத்

15

## மாகாணசபை தேர்தலில் அநுர அரசு மண் கவ்வும்!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 06

"மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும்பட்சத்தில் அதில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி மண் கவ்வும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பாராளுமன்றத் தேர்தலைவிடவும்

15

## சிறைச்சாலைகளில் உயிரிழந்த தமிழ்க் கைதிகளுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜூலை 06

சிறைச்சாலைகளில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூரும் வகையில், யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக, குரலற்றவர்களின் குரல் அமைப்பு அறிவித்துள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணம் கிட்டு பூங்கா சுற்று வட்டத்தில், எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில், இந்த நினைவேந்தல் நடத்தப்படும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தங்களது உரிமைகளுக்காகக் குரல்கொடுத்த நூற்றுக்கணக்கான தமிழர்கள், பல ஒடுக்குமுறை

15

## 300,000 இற்கும் மேற்பட்டோர் போதைப்பொருளுக்கு அடிமை

கொழும்பு, ஜூலை 06

நாடளாவிய ரீதியில் 300,000 இற்கும் மேற்பட்டோர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக தேசிய ஆபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

புதிய புனர்வாழ்வு மையங்கள் நான்கை நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய ஆபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் சுஜித் கொத்தலாவல தெரிவித்தார்.

21 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கான புனர்வாழ்வு மையத்தை பேராதனை பகுதி யில் நிறுவ அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மனிதப் புதைகுழிகளை தோண்டுவதை கைவிட வேண்டும்

## அரசாங்கத்துக்கு நாமல் எம். பி. அறிவுரை

கொழும்பு, ஜூலை 06

**நாட்டில் நாளாந்தம் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இயல்பாகிவிட்டன. ஆனால், அரசாங்கமோ ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயர்ஸ்தானிகரை அழைத்து வந்து பழைய மனிதப் புதைகுழிகளை தோண்டுகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும், மனிதப் புதைகுழிகளை தோண்டுவதை விடுத்து மக்களின் பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். தேசிய பாதுகாப்பு பற்றி பேசுபவர்களை இனவாதிகளாக சித்திரிக்கும் போக்கு காணப்படுகிறது- என்றார். (எ)

# முன்னாள் அமைச்சர் சந்திரசேன மறியலில்

கொழும்பு, ஜூலை 06

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதை தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது நண்பர்களுக்கு 25 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சோள விதைகளை விநியோகித்த சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் நேற்று முன்தினம் காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்றறிக்கை

## கல்வி அமைச்சால் வெளியீடு

கொழும்பு, ஜூலை 06

2026 ஆம் ஆண்டு அரச பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்றறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

தரம் ஒன்றுக்கு தங்கள் பிள்ளைகளை சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் இந்த சுற்றறிக்கையை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.moe.gov.lkயில் பார்வையிடலாம்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை கவனமாகப் பின்பற்றுமாறு கல்வி அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

# படையினரின் திடீர் சோதனையில் 300இற்கும் அதிகமானோர் கைது!

கொழும்பு, ஜூலை 06

பொலிஸ் மற்றும் படையினரின் விசேட சோதனையில் 300இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

கந்தானை, ஜா-எல, வத்தளை மற்றும் ராகமை பகுதிகளில் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது போதைப்பொருள் மற்றும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 300இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.(எ)

# செம்மணி மனித புதைகுழியில் பலர் தாறுமாறாக புதைப்பு!

## சட்டத்தரணி மணிவண்ணன் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 06

செம்மணி மனிதப் புதைகுழியில் ஒரே தடவையில் ஏராளமானவர்கள் தாறுமாறாக புதைக்கப்பட்டிருப்பதை எங்கள் கண்ணால் பார்க்கக் கூடியதாக இருந்தது என சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய்வு பணிகளை பார்வையிட்ட பின்னர் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் சார்பிலும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட மயானத்தில் அகழ்வாய்வு பணிகள் நடைபெறுகின்றன என்ற அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் சார்பிலும் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்.

செம்மணி சித்துப்பாத்தியிலே 11இற்கு 11 என்ற விஸ்தீரணமான இடத்திலே அகழ்வுக் பணிகள் இடம்பெற்றாலும் சற்று அருகில் உள்ள ஏனைய பகுதியொன்றிலும் அகழ்வாய்வு பணி நடைபெறுகிறது. மேலதிகமான இடங்களிலும் அகழ்வாய்வு பணிகள் நடைபெறலாம் என்று அனுமானங்கள் காணப்படுகிறது.

மனிதப் புதைகுழிகளில் எலும்புக்கூடுகள் மீட்கப்படும் விதத்தை பார்க்கும் போது ஐந்துக்கும் மேற்பட்ட மண்டை ஓடுகள் ஒரே இடத்தில் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

ஒரே தடவையில் ஏராளமானவர்கள் தாறுமாறாக புதைக்கப்பட்டிருப்பதை எங்கள் கண்ணால் பார்க்கக் கூடியதாக இருந்தது.

நாற்பதை கடந்தும் மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருப்பது மிகப்பெரிய மனிதப் புதைகுழி இந்த பிரதேசத்தில் இருப்பதற்கான அறிகுறிகளை தென்பட வைக்கிறது.

உலகம் முழுவதிலும் பல்வேறுபட்ட மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டிருந்தாலும் கூட அவை எல்லாவற்றிலும் இருந்து சற்று வித்தியாசமானதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இந்த மனிதப் புதைகுழி காணப்படுகிறது.

இந்த எலும்புக் கூட்டுத் தொகுதியிலே எந்த ஒரு உடைகளும் கண்டெடுக்கப்படாமல் இருப்பதும் சில குழந்தைகளின் எலும்புக்கூடுகள் மீட்கப்படுவதும் திட்டமிட்ட கொலை ஒன்று நடைபெற்று புதைகுழிக்குள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகங்கள் வெளியிடப்படுகின்றன.

தடயங்களை சரியாக கண்டுபிடிக்கக்கூடாதவாறு திசை திருப்பும் விதத்திலும் பல்வேறு நடவடிக்கைகள், சடலங்கள் புதைகுழிக்குள் புதைக்கப்பட்ட போது முன்னெடுக்கப்பட்டிருக்கலாமா என்று சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த அகழ்வுப் பணிகளைத் தொடர்ச்சியாக கண்காணிப்பதற்காக சட்டத்தரணிகள் நாங்கள் தயாராக இருக்கிறோம். மிக முக்கியமாக இந்த அகழ்வுப் பணி ஊடாக உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது”- என்றார். (எ)

# உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களில் வெளியாரின் செல்வாக்கு அதிகரிப்பு

வவுனியா, ஜூலை 06

வடக்கில் பல உள்ளூராட்சி மன்றங்களில் கட்சி ஆதரவாளர்கள், அவர்களுக்கு நெருக்கமானவர்கள் அலுவலகங்களுக்குள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கில் உள்ள பல உளளூராட்சி மன்றங்களில் முதல்வர், பிரதி முதல்வர், தவிசாளர் மற்றும் உப தவிசாளர்களின் அலுவலகங்களுக்குள் அவர்களின் ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள் உட்பட பலர் குழுமி இருப்பதாகவும் இதன் காரணமாக சேவை பெறுநர்கள் நீண்ட நேரமாக காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படுவதாகவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தங்களுக்கான தேவைகளின் பொருட்டு செல்கின்ற போது உள்ளூராட்சி மன்ற தவிசாளர், உப தவிசாளர், பிரதி முதல்வர் ஆகியோர் தங்களுக்கு நெருக்கமானவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களுடன் கூடி கதைத்துக்கொண்டிருப்பதனாலும் குறித்த பிரதேசத்துக்குள் அவர்கள் இருப்பதினாலும் கால தாமதமாகவே தமது காரியங்களை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலை விசனத்தை ஏற்படுத்துவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் துறைசார் அமைச்சர் விசேட சுற்று நிருபங்களை விடுத்தேனும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10)


# மோட்டார் சைக்கிள் மீது மானிப்பாயில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ்ப்பாணம் - மானிப்பாய் நகர்ப் பகுதியில் கடை ஒன்றுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐவர் கொண்ட குழு, மோட்டார் சைக்கிள் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



எங்கட புத்தகங்கள் வெளியீடான
நாடகர் க. பாலேந்திராவின்
'பிரத்தியேகக் காட்சி – ஏழு நாடகங்களும் பதிவுகளும்'
நூல் வெளியீட்டு விழா
காலம் : 12.07.2025 / சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 03.30 மணி
இடம் : எங்கட புத்தகங்கள் இல்லம்
(இல.18/2, திருவடிநிலை, அம்மன்வீதி, யாழ்ப்பாணம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் மகாவலி திட்டத்தின் கீழ் 350 ஏக்கர் நிலம் பறிபோகும் அபாயம்!

வவுனியா, ஜூலை 06

**வவுனியா வடக்கு, வெடிவைத்தகல்லு பகுதியில் மகாவலி திட்டத்தின் கீழ் 350 ஏக்கர் நிலம் தமிழ் மக்களிடமிருந்து பறி போகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.**

மகாவலி திட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் இனப் பரம்பலை சீர்குலைக்கும் செயல்பாடுகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தது. வெடிவைத்தக ல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொக்கச்சான் குளம் அபகரிக்கப்பட்டு கலாபோகஸ் வேவ என்னும் பெயரில் புதிய குடியேற்றம் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக, தற்போது வெடிவைத்தகல்லு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மற்றொரு கிராமமான திரிவைச்சகுளம் பகுதியில் 350 ஏக்கர் நிலம், மகாவலி வலயம் என்ற போர்வையில் உள்வாங்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளது. குறித்த நிலத்தை தென்பகுதி நிறுவனம் ஒன்றுக்கும், பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் கூறினர்.

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தமிழ் மக்களின் நிலங்கள், மகாவலித் திட்டம் என்ற போர்வையில் கபளீகரம் செய்யப்பட்டு குடியேற்றங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முன்வர வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10)

# இணுவிலில் சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 06

இணுவில் பொது நூலக சிறுவர் திறன் விருத்தி மைய சிறுவர்களின் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது.

சிறுவர் சந்தையை போசகர் இரா. அருட்செல்வம் ஆசிரியரும் அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளையும் நிர்வாக உத்தியோகத்தர் பொ. சுந்தரலிங்கமும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

ஆசிரியர்களின் விசேட ஒழுங்கமைப்பிலும் வழிகாட்டலிலும் இந்த சிறுவர் சந்தை சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (எ-05)






# 'பசியை போக்குவோம்' விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூலை 06

வேள்ட் விஷன் லங்கா நிறுவனமானது சங்கானை பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் இணைந்து நடத்திய 'பசியை போக்குவோம்' எனும் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனியும் போசணைக் கண்காட்சியும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நடைபவனியானது சங்கானை பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்து சங்கானை கலாசார மண்டபத்தை சென்றடைந்தது. அங்கு விருந்தினர்களால் போசணைக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போசணை பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், சங்கானை உதவி பிரதேச செயலர் திருமதி பிரணவசொரூபி சிவகரன், வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சஞ்சீவன், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி யதுநந்தனன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன், வேள்ட் விஷன் முகாமையாளர் யூட் நிஷாந்தன், அரச உத்தியோகத்தர்கள், வேள்ட் விஷன் உத்தியோகத்தர்கள், சங்கானை பிரதேச சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளில் அரச கொள்கை நியமங்களை உறுதியாக செயல்படுத்த வேண்டி மாணவர்களால் கையொப்பமிட்ட விண்ணப்பக் கோரிக்கை அதிகாரிகளி டம் ஒப்படைக்கப்பட்டது. (எ-05)

# நைஜீரியாவிலிருந்து யாழுக்கு வந்த இளைஞனுக்கு மலேரியா

யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ்ப்பாணத்தில் இளைஞன் ஒருவருக்கு மலேரியாக் காய்ச்சல் இனங்காணப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 30ஆம் திகதி காய்ச்சலுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு பிளாஸ்மோடியம் பல்சிபரம் என்ற மலேரியாக் காய்ச்சல் இனங்காணப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த குறித்த இளைஞன் 6 மாதங்களாக நைஜீரியா கப்பல் ஒன்றில் வேலை செய்துவிட்டு கடந்த 28ஆம் திகதி நைஜீரியாவிலிருந்து விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொருளாதார வளர்ச்சியால் எந்தப் பயனும் இருக்காது!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 06

நாட்டின் பொருளாதார நன்மைகள் கீழ்நிலை கிராமிய மக்களுக்குச் செல்லாவிட்டால், புள்ளி விவரங்களில் எவ்வளவு பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்டாலும், எந்தப் பயனும் இருக்காது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஒருபுறம், நாட்டில் பொருளாதார வளர்ச்சியை அடைவதுடன், மறுபுறம், பொருளாதாரத்தை விரிவுபடுத்தி கிராமிய மக்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுத்து, அவர்களை பொருளாதாரத்தில் பங்கேற்பாளர்களாக மாற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் வலியுறுத்தினார்.

அலரி மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'சமூக சக்தி' தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

சில ஆண்டுகளுக்கு முன்பு நமது நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்ததை நாம் அறிவோம். இந்த வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்களை நாம் அடையாளம் காண முடியும். ஆனால், அந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு எந்த விதத்திலும் காரணமாகாத கிராமங்களில் உள்ள சாதாரண மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தற்போது, பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்க அளவு நிலையான நிலைக்குக் கொண்டு வர முடிந்துள்ளது. நீண்ட காலமாக டொலரின்பெறுமதியை சுமார் 300 ரூபா அளவில் வைத்திருத்தல், அந்நியச் செலாவணி இருப்புக்களை முறையாக அதிகரித்தல், திறைசேரியின் வருமானத்தை நாம் எதிர்பார்த்த இலக்குகளுக்குக் கொண்டு செல்வது, வங்கி வட்டி விகிதத்தை ஒற்றை இலக்கத்தில் வைத்திருப்பது போன்ற பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கான காரணிகளை கணிசமான அளவில் நிறைவுசெய்ய முடிந்துள்ளது.

மேலும், நமது நாடு குறித்து முதலீடுகள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை படிப்படியாக வளர்க்க முடிந்துள்ளது. நிறுத்தப்பட்டிருந்த பல திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடித்துள்ளோம்.

பல புதிய திட்டங்களுக்கான ஏராளமான முன்மொழிவுகளும் கிடைத்துள்ளன. அதன் பல முக்கியமான முன்மொழிவுகள் கடந்த அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய முதலீடுகள் மற்றும் புதிய அபிவிருத்தித் திட்டங்களில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். நாம் செயல்படுத்தும் மிகச் சிறந்த முதலீட்டுத் திட்டங்கள் ஊடாக ஒருபுறம் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் மறுபுறம் பொருளாதார வளர்ச்சியையும் அடைய முடியும். ஆனால், அந்தப் பொருளாதாரப் பலன்கள் கீழ்நிலைக் கிராமிய மக்களுக்கு செல்லவில்லை என்றால், புள்ளி விபரத்தில் மாத்திரம் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் பொருளாதார வளர்ச்சியையும் அடைவதில் பயனில்லை - என்றார். (எ)

# கரையோர கர்ப்பவதிகள் போதைப்பொருக்கு அடிமை

கொழும்பு, ஜூலை 06

தெஹிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, மொறட்டுவை மற்றும் எகொட்ட உயன உள்ளிட்ட கரையோரப் பகுதிகளில் வசிக்கும் கர்ப்பவதிகள், தாய்மார்களிடையே மது அருந்துதல் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

இது கடும் கவலைகளை எழுப்புகிறது என தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர சபையின் உறுப்பினரும் வைத்திய நிபுணருமான சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இது தொடர்பில் சமல் சஞ்சீவ மேலும் கூறுகையில்,

"நாட்டின் கரையோர பகுதிகளில் கர்ப்பவதி பெண்களில் பலர் மது மற்றும் போதைப்பொருள் பாவனையிலும், வர்த்தகத்திலும் ஈடுபடுவது பொதுவான ஒரு விடயமாக காணப்படுகிறது.

இது ஒரு பாரிய பொது சுகாதாரப் பிரச்னையாகும். இதனை சுகாதாரத்துறையால் மட்டும் கையாள முடியாது.

இந்தப் பிரச்னையை கையாள பொது மக்கள், பாதுகாப்பு அமைச்சு மற்றும் பிற அரச திணைக்களங்கள், சமூக சேவை அமைப்புகளின் ஒத்துழைப்பு அவசியம்.

இந்தக் கர்ப்பவதி பெண்களில் பெரும்பாலானோர் சுகாதார அதிகாரிகளிடம் தங்களைப் பதிவு செய்வதையோ அல்லது மருத்துவமனைகளுக்குச் சென்று பரிசோதனை செய்வதையோ தவிர்த்து வருகின்றனர். இதனால் மருத்துவக் குழுக்கள் அவர்களுக்கு சரியான ஆலோசனை மற்றும் கவனிப்பை வழங்கு வது கடினமாகிறது.


அவர்களில் பலர், பிரசவத்திற்குப் பின்னர் மருத்துவமனைகளுக்குச் செல்லவோ அல்லது தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடவோ மறுக்கிறார்கள்.

நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில், இந்தப் பகுதிகளில் மது மற்றும் போதைப் பொருள் பயன்பாடு அதிகமாக இருப்பதால், பொது மக்களிடையே சுகாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்கல்வி எதிர்காலத்தில் தீர்க்கமான பாடமாக்கப்படும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கம்பஹா, ஜூலை 06
தொழிற் கல்விக்கான கவனம் போதுமானதாக இல்லை. எனவே, எதிர்காலத்தில் இந்த நாட்டின் தீர்க்கமான பாடமாக தொழிற்கல்வியை மாற்றவுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

முறையான - கவர்ச்சிகரமான நிறுவன அமைப்பைக் கட்டமைப்பதற்காக நாடு தழுவிய தொழிற்கல்வி நிறுவனங்களை மையமாக வைத்து ஜூலை 04 ஆரம்பிக்கப்பட்ட 'ஸ்ரம மெஹெயும' (உழைப்பு நடவடிக்கை) திட்டத்தின் ஆரம்ப விழா கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"தொழிற்கல்வித் துறையே எதிர்காலத்தில் இந்த நாட்டின் தீர்க்கமான பாடமாக மாறப் போகின்றது. தொழில்சார் உலகிற்குத் தேவையான மனித வளம் கல்வி அமைச்சிலிருந்தே உருவாகிறது.

இருப்பினும், நம்மில் பலரும், அதே போன்று நமது நாடும் பல சந்தர்ப்பங்களில் நினைக்காத, கவனம் செலுத்தாத ஒரு முக்கிய பகுதியே இந்த தொழில்சார் உலகிற்குத் தேவையான மனித வளத்தை உருவாக்கும் இடமாகவே தொழிற்கல்வி இருந்து வருகின்றது.

இருப்பினும், பாடசாலைப் படிப்பை முடித்து, பல்கலைக் கழகத்துக்குச் செல்ல முடியவில்லை என்றால் செல்லக் கூடிய ஒரு மாற்று இடமாகவே தற்போதும் தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தால் பார்க்கப்படுகின்றது என்பதையும், அல்லது மற்ற தேர்வுகள் அனைத்தையும் மேற்கொண்டு அவை கைகூடவில்லை என்றால் இறுதியில் வந்து விழும் இடமாகவே இது கருதப்பட்டு வருகின்றது.

இது மிகவும் தவறானதாகும். தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் முக்கியமான, புத்திசாலித்தனமான, நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமான தொரு முடிவாகும்.

தொழிற்கல்வி கற்பதற்கு எடுக்கும் முடிவானது தற்செயலாக இருக்க முடியாது. அறியாமையால் அல்லது இறுதி நேரத்தில் எடுக்கும் முடிவாகவும் இருக்க முடியாது"- என்றார். (எ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

மஹியங்கனை, ஜூலை 06
மஹியங்கனை, குருமட பிரதேசத்தில் கூர்மையான ஆயுதத்தால் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட நபரின் உறவினரின் மரண வீடொன்றில் இறுதிச் சடங்கின் போது ஏற்பட்ட குடும்பத் தகராறின் விளைவாக இந்தக் கொலை நடந்திருப்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மஹியங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போலி மருந்து சிட்டை பயன்படுத்தி மாத்திரை பெற முயன்றவர் கைது!

மட்டக்களப்பு, ஜூலை 06
மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றி வரும் சிற்றூழியர், மருத்துவரின் போலி மருந்து சீட்டை உருவாக்கி, விலை உயர்ந்த வலி நிவாரண மாத்திரையான டிராமாடோல் மாத்திரையை முறைகேடாக பெற முயன்ற குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாத்திரையை பெற்றுக்கொள்வதற்காக, குறித்த சிற்றூழியர், மருத்துவரின் பெயரில் போலியான மருந்து சிட்டை தயாரித்து, தனது ஊரிலுள்ள நபர்களை மருத்துவமனை மருந்தகத்துக்கு அழைத்து வந்து வழங்கச் செய்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடி குறித்து மருந்தக ஊழியர்கள் சந்தேகம் கொண்டபோது, மருந்து சிட்டை மதிப்பீடு செய்தனர். இதன் போது அது போலியானது என உறுதி செய்யப்பட்டதை அடுத்து, மருத்துவமனை நிர்வாகத்திடம் தெரிவிக்கப்பட்டது. இதன்படி மருத்துவமனை பணிப்பாளர் உடனடியாக சம்பவ இடத்துக்கு பொலிஸாரை அழைத்து, குறித்த சிற்றூழியரை கைது செய்தனர். (எ)

# பாதாள உலகக் குழு செயற்பாடுகளை கட்டுப்படுத்த அவகாசம் கோரும் அரசு!

கொழும்பு, ஜூலை 06
பாதாள உலகக் குழுச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சுமார் ஐம்பது ஆண்டுகளாக பாதாள உலகக் குழு செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் அதனை உடனடியாக கட்டுப்படுத்திவிட முடியாது எனவும் வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் குழுச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டுமென மக்கள் கடந்த 2024ஆம் ஆண்டு தீர்மானித்தனர் என அவர் கூறினார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததன் மூலம் இந்த தீர்மானத்தை மக்கள் எடுத்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

டுபாயிலிருந்து பாதாள உலகக் குழுச் செயற்பாடுகள் இடம்பெறுமளவுக்கு தற்போது பாதாள உலகக்குழுச் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக் காட்டினார்.

நிச்சயமாக இந்த பாதாள உலகக்குழு செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் அதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ராகமை, கந்தானை பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 06
அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இராணுவத்தினர், கடற்படையினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ராகமை, கந்தானை மற்றும் வத்தளை உள்ளிட்ட பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் சட்டம் - ஒழுங்கை மீட்டெடுப்பதற்கும் குற்றம் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள அனைத்து முக்கிய வீதிகளிலும் வாகனங்கள் மற்றும் பொது மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை ராகமை மற்றும் கந்தானை உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்ததன் பின்னர் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# கணவன் உயிரிழப்பு; மனைவி கைதானார்

மட்டக்களப்பு, ஜூலை 06
மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாஞ்சோலை பகுதியில் கணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அவரது மனைவியை வாழைச்சேனை பொலிஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

குறித்த பகுதியில் நடக்க முடியாத நிலையில் சக்கர நாற்காலியில் வாழ்ந்து வந்த 73 வயதுடைய முதியவர் அடிகாயங்களுடன் கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மனநிலை பாதிக்கப்பட்ட மனைவி ஊன்றுகோலால் தாக்கியதில் கணவன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்தது.

இதனையடுத்து மனநிலை பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அரசியல்வாதியை காப்பாற்றுவதற்காக அதிகாரிகளை குற்றவாளியாக்கும் அரசு

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 06
பரிசோதனையின்றி கொள்கலன் விடுவிப்பு விவகாரத்தில் அரசாங்கத்துக்கு நெருக்கமான நபரை பாதுகாப்பதற்கு அரச அதிகாரிகளை குற்றவாளிகளாக்கும் செயல்பாடுகள் தற்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது. அரச நிர்வாகத்தை பலவீனப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயல்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாமல் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டு மக்களின் அடிப்படை பிரச்னைகளை மூடி மறைத்து சர்வாதிகாரமான முறையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கும் நிலையில் அரசாங்கம் உள்ளது. அனைத்து கட்டமைப்புகளிலும் தற்போது அடக்குமுறைகள் தீவிரமடைந்துள்ளன.

முதலில் ராஜபக்ஷக்களை திருடர்கள் என்றார்கள். பின்னர் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என்றார்கள். தற்போது அரச அதிகாரிகளை திருடர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அரச நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரச நிர்வாகத்தை பலவீனப்படுத்தும் செயல்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

சுங்கத்தில் பரிசோதனையின்றி கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் உண்மையை அரசாங்கம் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து தற்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் அரச அதிகாரிகளை குற்றவாளிகளாக்கும் வகையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொள்கலன் விவகாரத்தில் அரசாங்கத்துக்கு நெருக்கமான நபரை பாதுகாத்துக் கொள்வதற்கு அரச அதிகாரிகளை குற்றவாளிகளாக்கும் செயல்பாடுகள் தற்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.07.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆனி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சம்பந்தனில்லா ஒரு வருடம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக, இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஏகத் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் காலமாகி ஒரு வருடமாகின்றது. இந்த ஒரு வருடத்தில் தமிழர் அரசியலில் நடைபெற்ற விடயங்களை நோக்கும் போது, ஒரு விடயத்தில் சம்பந்தன் முக்கியத்துவம் பெறுகின்றார். அதாவது அவர் அரசியலை தீர்மானிக்கும் நபராக இருந்த வரையில் ஈழத் தமிழர்களுக்கு என்று சொல்லிக் கொள்வதற்கு ஒரு தலைமை இருந்தது. ஆனால் அது இப்போதில்லை.

சம்பந்தன் இருந்த காலத்தில் அவர் அவருக்கான தலைமைத்துவ கடமைகளை சரிவரச் செய்யவில்லை என்னும் விமர்சனம் எந்தளவுக்கு சரியானதோ அதேயளவுக்கு அவர் ஈழத் தமிழ் மக்களின் அனைத்துலக முகவரியாக இருந்தார் என்பதும் உண்மை. சம்பந்தன் இல்லாத கடந்த ஒரு வருடங்களை எடுத்து நோக்கினால் அந்த இடைவெளியை தெளிவாக உணர முடியும். இன்றைய சூழலில், ஈழத் தமிழர்கள் ஒரு தலைமையில்லாத இனமாகவே அடையாளம் காணப்படுகின்றனர். ஈழத் தமிழர்கள் பற்றி யாருடன் பேசுவது என்னும் கேள்விக்கு பதிலில்லாத ஒரு அரசியல் சூழலே காணப்படுகின்றது.

இரா.சம்பந்தன், இலங்கையின் மிதவாத அரசியல் பாரம்பரியத்தின் இறுதித் தலைவராக இருந்தவர். ஈழத் தமிழரின் ஜனநாயக அரசியல் வரலாற்றை உற்று நோக்கினால் அது முற்றிலுமாக செல்வநாயகத்தின் வழித்தடத்திலேயே நடைபோட்டது. செல்வநாயகத்தின் பாசறையில் அரசியல் பயின்றவர்களே மிதவாத அரசியலுக்கு தலைமை தாங்கினார்கள். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் செல்வநாயகத்தின் இறுதி அம்பாக இரா.சம்பந்தனை குறிப்பிடலாம். சம்பந்தனுடன் செல்வநாயகத்தின் அம்புகள் தீர்ந்துவிட்டன. செல்வநாயகம் வழிவந்த இலங்கை தமிழ் அரசு கட்சியின் கதையும் முடிந்துவிட்டது. இப்போதிருப்பவர்கள் எவருமே செல்வநாயகத்தின் வழிவந்தவர்கள் அல்லர்.

இன்று இலங்கை தமிழ் அரசு கட்சி தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் மிகவும் பலவீனமான கட்சியாக இருப்பதற்கு, அந்தக் கட்சியை கட்டுப்படுத்துபவர்களின் பின்னணியும் ஒரு பிரதான காரணமாகும். இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியென்பது பெருமளவிற்கு தேர்தல்களின் போது, பதவிகளை பெறுவதற்கான ஓர் இலகுவழியாகவே நோக்கப்படுகின்றது - காரணம், இன்றும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த கணிசமான தமிழ் மக்கள் தமிழ் அரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தை தங்களின் அரசியல் சின்னமாக எண்ணுகின்றனர்.

இன்று தமிழ் அரசு கட்சியின் பலம் என்பது, அந்தக் கட்சியில் இருப்பவர்கள் அல்லர் மாறாக, கட்சியுடன் தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்பது மட்டுமே அதன் பலமாகும். ஆனால், ஒரு காலத்தில் தமிழ் அரசு கட்சியை பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களின் தகுதியால் அந்தக் கட்சிகள் நோக்கப்பட்டன. அளவிடப்பட்டன. முரண்பாடுகள் இருந்த போதிலும் கூட, தென்னிலங்கை தலைவர்களும் தமிழ் தலைவர்களை மதிக்கும் நிலைமை இருந்தது. அதற்கு காரணம் அன்றிருந்தவர்களின் தகுதி நிலையாகும்.

தகுதி இருக்கின்றபோது எதிரிகள் கூட மதிப்பளிப்பார்கள். அந்த வரிசையில் இறுதியாக இருந்த ஒருவராக சம்பந்தனை குறிப்பிட முடியும். சம்பந்தன் இருக்கின்ற வரையில் தென்னிலங்கை தலைவர்களும் சம்பந்தனுடன் சில விடயங்களை பேச வேண்டிய, சம்பந்தனின் அபிப்பிராயங்களை செவிமடுக்க வேண்டிய தேவையிருந்தது உண்மை. ஆனால், சம்பந்தனுக்கு பின்னர் தென்னிலங்கை கவனத்தில் கொள்ளக் கூடிய எவரும் இல்லை என்பதும் உண்மை.

ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு வெற்றியை விட்டுச் சென்றவர்கள் என்று எவருமில்லை - அந்த வரிசையில்தான் சம்பந்தனும் இருக்கின்றார். ஆனாலும் சம்பந்தன் இருக்கின்ற வரையில், தமிழ் மக்களுக்கான தலைமை என்று சொல்லிக் கொள்ள, ஏனைய கட்சியினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான ஒருவராக அவர் இருந்தார்.

## ஆறு மாதங்களில் 120.5 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டிய மதுவரி திணைக்களம்

*கொழும்பு, ஜூலை 06*

*மதுவரித் திணைக்களம் 6 மாதங்களில் 120.5 பில்லியன் ரூபாய்கள் குறிப்பிடத்தக்க வருமானத்தை ஈட்டியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பணிகள் மற்றும் நோக்கில் மதுபானம் மற்றும் புகையிலைத் துறையை முறையாக ஒழுங்குபடுத்தி வரிப் பணத்தை அரசாங்கத்திற்கு அளவிடுவதற்கும், அத்தொழிலில் சட்டவிரோதமான பணப் பாய்ச்சல் தொடர்பான சட்டத்தை பலப்படுத்துதல், அதனால் ஏற்படும் சமூக மற்றும் சுகாதாரப் பாதிப்புகளைத் தடுப்பதன் ஊடாக மக்களுக்குத் தெளிவுபடுத்தி, சமூகப் பாதுகாப்பை உருவாக்குவதற்காக நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

*அதன்படி 2022 ஆம் ஆண்டில் 170.3 பில்லியன், 2023 ஆம் ஆண்டில் 178.6 பில்லியன் ரூபாய்களும், 2024 ஆம் ஆண்டில் 226.7 பில்லியன் ரூபாய்களும் அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கு மதுவரித் திணைக்களம் செயற்பட்டுள்ளது. மேலும் 2025 ஜூன் 30 வரை 120.5 பில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளதுடன் அது நிதி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள இலக்கில் 102.6 வீத வளர்ச்சியாகும்.*

*ஒவ்வொரு அரசாங்கமும் மதுபானம் மற்றும் புகையிலை அடிப்படையில் வரி விதிப்பு இடம்பெற்றுள்ளமை, அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக மாத்திரமன்றி அதன் உற்பத்திகளை நுகர்வதை கட்டுப்படுத்துதல் மற்றும் அவ்வுற்பத்திகளுக்குக் காணப்படும் கேள்வியை குறைப்பதனால் சமூக மற்றும் சௌபாக்கிய பாதிப்புகளை குறைக்கும் நோக்கம் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*(அ)*

## சிங்களம், தமிழ் மொழிபெயர்ப்பு மென்பொருள் விரைவில் வருகிறது

*கொழும்பு, ஜூலை 06*

*செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கான மொழிபெயர்ப்பு மென்பொருளை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*மொறட்டுவ பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்கள், தனியார் துறையுடன் இணைந்து இந்த மென்பொருளை உருவாக்க ஒத்துழைத்து வருவதாக பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.*

*இதன்படி, அடுத்த ஆறு மாதங்களுக்குள் இந்த மென்பொருள் பொதுமக்களுக்குக் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.*

*புதிய மென்பொருள், பேசும் சிங்கள உள்ளடக்கத்தை சில நொடிகளில் தமிழில் மொழிபெயர்க்கும் திறனைக் கொண்டிருக்கும் என்றும், நேர்மாறாகவும் இது இருக்கும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*(அ)*

## புறாப்பொறுக்கியில் தடம்புரண்ட வாகனம்!

*யாழ்ப்பாணம், ஜூலை 06*

*பருத்தித்துறை பிரதான வீதியின் உடுப்பிட்டி புறாப்பொறுக்கி பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கனரக வாகனமொன்று நேற்று காலை தடம்புரண்டது.*

*கற்கோவளம் பகுதியிலிருந்து வீதி புனரமைப்பு பணிக்கு பயன்படுதப்பட்ட ட்றோளர் வாகனத்தைத் ஏற்றிக்கொண்டு சென்ற கனரக வாகனமே புறாப்பொறுக்கிப் பகுதியில் தடம் புரண்டுள்ளது.*



*முன்னால் சைக்கிளில் சென்றவர் கட்டுப்பாட்டை இழந்து குறித்த கனரக வாகனத்துடன் விபத்து ஏற்படுத்தவிருந்த நிலையில் அவரைக் காப்பாற்ற முற்பட்ட வேளையிலேயே குறித்த வாகனம் தடம் புரண்டதாக தெரிவிக்கப்பட்டது.*

*(அ-5)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகள் கற்றால் மகுடம் நிச்சயம்!

என். பத்ரி




நமது அன்றாட வாழ்வில் பல தகவல்களை மற்றவர்களுடன் பரிமாறிக்கொள்ள வேண்டிய தேவை நம் அனைவருக்கும் உள்ளது. அதற்கு சூழலுக்கேற்ப நம் அனைவருக்கும் ஒரு மொழி தேவைப்படுகிறது.

மனிதகுலத்தின் அடையாளமான மொழி, பிற மனிதர்களைப் புரிந்துகொள்ள நமக்கு மிகவும் உதவுகிறது. மொழி ஒருவரின் எண்ணங்களைச் செம்மைப்படுத்துகிறது. பல எதிர்பாராத நல்வாய்ப்புகளை நம் வாழ்வில் கொண்டுவந்து சேர்க்கிறது.

ஒருவரின் பன்மொழிப் புலமையை அவரின் தனித்துவ திறனாக சமுதாயம் கருதுகிறது. பல மொழிகளை அறிந்திருப்பது, அதிக துறைகளில் வேலைவாய்ப்புகளை மாணவர்களுக்கு அள்ளித் தருகிறது. குறிப்பாக, வேலை தேடுவோருக்கு அயல்நாட்டு மொழிகளில் புலமை, சர்வதேச நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு உதவுகிறது.

மகாகவி பாரதி 18 மொழிகளை அறிந்திருந்தார். அவர் அறிந்திருந்த திராவிட, ஆரிய, ஐரோப்பிய மொழிகள் அவருடைய படைப்புகளுக்கு மெருகூட்டின. மொழிகளைப் பேசுவதிலும், எழுதுவதிலும் திறமையானவர்கள் எல்லாப் பணிகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். இது தெரிந்தும் நம் கல்வி அமைப்பு, மொழிகளுக்கான முறையான அங்கீகாரத்தை வழங்குவதில்லை.

ஒரு மொழியை முறையாகக் கற்றுத் தேர்ச்சிபெற்று, தவறில்லாமல் அதைப் பயன்படுத்துவது என்பது ஒரு கலை ஆகும். பன்மொழி அறிந்தவர்கள் பல நல்ல வாய்ப்புகளைப் பெற்று வாழ்வில் மேம்படுகிறார்கள். நல்ல வேலைவாய்ப்பைப் பெற மொழிப்பாட பட்டங்கள் மாணவர்களுக்கு பெரிதும் உதவுகின்றன. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, அரபு, பிரெஞ்சு போன்ற மொழிகளை அறிந்தவர்கள் பெரும்பாலும் வேலைவாய்ப்பின்றி இருப்பதில்லை.

நமது தாய்மொழி தமிழை நாம் பயில்வது அவசியம். ஆனால், பள்ளிகளில் ஆங்கிலவழி படிப்புக்கு இருக்கும் மோகம், தமிழ் மொழிவழி படிப்புக்கு இல்லாதது துரதிருஷ்டவசமானது. தேர்வுகளும் மாணவர்களின் எழுத்துத் திறமையை மட்டுமே சோதிக்கும் வகையில் உள்ளன. மேல்நிலைத் தேர்வுகளில் பேச்சு மொழிக்கு உள்ள அகமதிப்பீட்டு முறையில் ஏராளமான குறைபாடுகள் உள்ளன.

உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளில் ஹிந்தி மூன்றாவது இடத்தில் உள்ளது. சுமார் 60 கோடிக்கும் அதிகமான பயனீட்டாளர்களைக் கொண்ட இந்த மொழி, உலகளாவிய தொடர்பிலும், பண்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. நேபாளம், ஃபிஜி, மோரீஷஸ் போன்ற நாடுகளிலும் ஹிந்தி பேசப்படுகிறது. உலகின் மிகப்பெரிய திரைப்படத் துறையான பாலிவுட், ஹிந்தி பேசாதவர்களும் ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்ள உதவுகிறது.

உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் ஆங்கிலம் பல நாடுகளில் உயர்கல்வி படிக்கவும், நல்ல வேலை வாய்ப்புக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. தமிழகத்தின் பல பகுதிகளில் அமைந்துள்ள தொழில் நகரங்களில் பல அந்நிய நாட்டு தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு அந்நிய மொழி அறிவை பணி நாடுநர்கள் பெற்றிருப்பது அவசியமானதாகக் கருதப்படுகிறது. மேலும், சீனா, லத்தீன் அமெரிக்கா, ரஷ்யா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் வளர்ச்சியின் பாதையில் உள்ளன. அந்த நாடுகளில் பணிபுரிய விரும்பும் மாணவர்களுக்கு அந்த நாட்டு மொழி அறிவு உதவியாக இருக்கும்.

பன்மொழி எழுத்தாளர்கள் அயல் மொழி பெயர்ப்பு பணியில் ஈடுபட்டு பெரும் வருமானத்தை ஈட்டி வருகிறார்கள். இன்றும் சில பொறியியல் கல்லூரிகள் அயல்நாட்டு மொழிகளைக் கற்பிப்பதன் மூலம் பிரபலமாகி வருகின்றன. அயல்நாட்டுப் பணிகளுக்கு ஜப்பானிய மொழி, பிரெஞ்சு மொழி, சீன மொழி ஆகியவற்றின் அறிவு மிகவும் தேவைப்படுகிறது.

பள்ளி நிலையிலேயே பல்வேறு மொழிகளில் பேச்சு, வாசிப்பு, எழுதுதல் ஆகிய திறன்களை மாணவர்கள் மேம்படுத்திக்கொள்வது நல்லது. மாணவர்களின் மொழித்திறன்கள் அனைத்தையும் சோதிக்கும் வண்ணம் அமையும் தேர்வுமுறை அவர்களுக்கு கூடுதல் பலனைத் தரும். அந்த மொழியில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், திரைப்படங்களையும் பார்ப்பது அவர்களுக்குத் தேவைப்படும் வழக்குமொழித் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவும். பல மொழிகளைக் கற்க இணையதளங்களின் சேவைகளையும் இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்றைய கல்வி நிலையங்கள் கணிதம், அறிவியல் போன்ற பாடங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மொழிப் பாடங்களுக்கும் கொடுப்பது நல்லது. தாய்மொழி, ஆங்கிலம், பிற இந்திய மொழிகளில் ஒன்று, பிற உலக மொழிகளில் ஒன்றைக் கற்பது என்னும் கொள்கை மாணவர்கள் தம் தொழில், வாழ்க்கையில் மேம்பட உதவும்.

தொழிற்படிப்புகளில் சேர மாணவர்களின் மொழிப் பாடங்களின் மதிப்பெண்களையும் கணக்கில் எடுத்துக் கொள்வது நல்லது. தொழிற்கல்வியில் தாய்மொழியுடன் மேலும் இரண்டு மொழிகள் படிப்பதை அரசு கட்டாயமாக்கலாம். எந்தப் பாடத்தையும் ஏதேனும் ஒரு மொழியின் உதவியுடன்தான் எவரும் கற்றுக்கொள்ள முடியும். இந்த நிலையில், ஒவ்வொரு மொழியும் நமக்கு முக்கியமானவை என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 06.07.2025 - 12.07.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - ஆனி 22
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : ஏகாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பண வரு வாய் அதிகரிக்கும். அரசு வகையில் அதிக அளவு சகாயங்களை பெறு வீர்கள். புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் பணத்தைச் சேமிக்க முற்படுவீர்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தேர்வு முடிவுகள் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரித்து, அந்தஸ்தும் உயரும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். நண்பர்கள் அனுசரணையாக இருந்த போதிலும், அவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசுங்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். வாக்கால் நல்ல வருமானம் உண்டு. உறவுகளைச் சந்திப்பதால் மனமகிழ்ச்சி ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு ஆகியவையும் கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனையின் ஒத்துழைப்பால் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் உள்ளவர்களின் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்பட்டுக் கோயில், குளங்களுக்கு தேவையான பணத்தை நன்கொடையாக வழங்கி மகிழ்வீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். அன்புக்கு இனியவர்களால் உங்கள் கண்ணீர் துளிகள் துடைக்கப்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுபகாரிய செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம்உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும் வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங் கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுபகாரிய நிகழ்ச்சிகள், புத்திர பாக்கியம் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். திடீரப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவிகள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். சிலருக்கு, நண்பர்களும் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. முயற்சிகள் வெற்றி எபறும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து ஒரு வருடத்திற்குள்ளாகவே சம்பந்தனை மறந்து விட்டதோ தமிழ்ச் சமூகம்?



வீரகத்தி தனபாலசிங்கம்

முதுபெரும் தமிழ் அரசியல் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் மரணமடைந்து கடந்த திங்கட் கிழமையுடன் (ஜூன் 30) சரியாக ஒரு வருடம் கடந்துசென்றது. முதலாவது நினைவு தினத்தில் அவரை இலங்கை தமிழச் சமூகம் நினைவுகூருவதற்கு தவறி விட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் எந்தவொரு இடத்திலும் நினைவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாகவோ அல்லது பத்திரிகைகளிலாவது நினைவஞ் சலி குறிப்பு ஒன்று வெளியானதாகவோ நாம் அறியவில்லை. சம்பந்தன் பல வரு டங்களாக தலைமை தாங்கிய இலங்கை தமிழரசு கட்சியும்கூட அவரை நினைவு கூருவது குறித்து சிந்திக்கவில்லை.

சம்பந்தன் மீதான சகல விமர்சனங்க ளுக்கும் அப்பால், சிங்களத் தலைவர்க ளினதும் சர்வதேச சமூகத்தினதும் மதிப்புக் குரியவராக விளங்கினார். அவரது மறைவு தமிழ் அரசியல் சமுதாயத்தில் எளிதில் நிரப்பமுடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்ப டுத்தியது என்பதை அவரது அரசியலை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட மறுக்க மாட்டார்கள். ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான கால அரசியல் வாழ்வைக் கொண்ட அவரை நினைவு கூருவதற்கு தமிழர்கள் தவறியதை தமிழ் அரசியல் சமுதாயத்தைப் பீடித்திருக்கும் ஒரு பிணி யின் வெளிப்பாடாகவே நோக்க வேண் டியிருக்கிறது.


சம்பந்தன் பல தசாப்தகால அரசியல் வாழ்வைக் கொண்டிருந்தாலும், உள்நாட் டுப்போரின் முடிவுக்கு பின்னரான காலப் பகுதியில் தமிழர் அரசியலை முன்னெ டுப்பதற்கு அவர் எவ்வாறு தலைமை தாங்கி வழிநடத்தினார் என்பதே அவரின் அரசியல் மரபாக வரலாற்றில் நினைவு கூரப்படும் என்பதில் சந்தேகமில்லை. முதலாவது நினைவு தினத்தில் கூட நினை வுகூருவது குறித்து எவரும் அக்கறைப்பட வேண்டிய அவசியமில்லாத அளவுக்கு அவரது மரபு ஒதுக்கி விடப்படக்கூடி யதா?

போரின் முடிவுக்கு பின்னரான காலப் பகுதியில் தமிழர் அரசியலை வழிநடத்து வதில் சம்பந்தன் தலைமையில் பொது வில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் குறிப் பாக தமிழரசு கட்சியும் கடைப்பிடித்து வந்த கொள்கைகளுக்கும் அணுகுமுறைக் குமான பொறுப்பை முற்று முழுதாகச் சம்பந்தன் மீது சுமத்திவிட முடியாது.

விடுதலை புலிகள் இயக்கம் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் அர சியல் சமுதாயம் படுமோசமாக பலவீனப் பட்டிருந்த சூழ்நிலைகளின் கீழ் அதுவும் குறிப்பாக பயங்கரவாதத்தை தோற்கடித் ததாக வெற்றிகொண்டாடிய சிங்கள அர சியல் சமுதாயம் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றை காண் பதில் அக்கறையற்ற மனோபாவத்தைக் கொண்டிருந்த ஒரு சூழ்நிலையிலேயே சம்பந்தன் தமிழர் அரசியலின் தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டியிருந்தது.

தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமை யாக வைத்திருந்து தமிழ் தேசிய கூட்ட மைப்பை இலங்கை தமிழர்களின் பலம் பொருந்திய ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக கட்டியெழுப்புவதற்கு சம் பந்தன் தவறியதனாலேயே இன்று தமிழ் அரசியல் சக்திகள் பல்வேறு கூறுகளாகிக் கிடக்கின்றன என்பதே அவர் மீதான முக்கியமான குற்றச் சாட்டு. தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை போருக்கு பின்னரான உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளுக்கு இசைவான முறையில் அடுத்த கட்டத் துக்கு நகர்த்தவேண்டிய வரலாற்றுப் பொறுப்பைக் கொண்டிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அவரின் முன்னாலேயே சீர்குலைந்தது. அவரால் குறைந்தபட்சம் தனது தமிழரசு கட்சியையேனும் ஐக்கி யமான ஒரு அரசியல் இயக்கமாக வைத் திருக்க முடியாமல் போய்விட்டது.

சம்பந்தன் தனது அரசியல் அனுபவத் தையும் மூப்பையும் பயன்படுத்தி தமிழ் கட்சிகளை ஒன்றுபடுத்தி வைத்திருந்தி ருக்க முடியும் என்று பரவலான அபிப்பி ராயம் இருந்தது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, முன்னைய காலத்தைப் போலன்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களினால்



> நாட்டில் வாழும் தமிழர்களின் நலன்களை அன்றி புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சில சக்திகளின் நலன்களை அல்லது தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுகின்றவர்களாகவே இன்றைய எமது தமிழ் அரசியல்வாதிகளில் கணிசமானவர்களை காணக்கூடியதாக இருக்கிறது.

கட்சி உறுப்பினர்களையும் அவற்றின் கட்டமைப்புக்களையும் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத ஒரு விபரீதமான போக்கு வளரத்தொடங் கிய ஒரு காலப்பகுதியிலேயே சம்பந்தன் தலைமைத்துவப் பாத்திரத்தை வகிக்க வேண்டியிருந்தது.

இன்று இலங்கையில் எந்தவொரு கட் சியின் தலைவரும் தனது கட்சியை முழு மையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கி றார் என்று கூறமுடியாது. அண் மைய தேர்தல்களின் பின்னர் உள்ளூராட்சி சபை களை அமைப்பதில் கட்சிகள் எதிர்நோக் குகின்ற நெருக்கடி இதை தெளிவாக வெளிக்காட்டுகின்ற பிந்திய உதாரணமா கும். மூன்று வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு பாரம்பரிய அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்ட பின் புலத்தில், அவர்கள் மத்தியில் குறிப்பிட்ட ஒரு கட்சிமீதான விசுவாசம் என்பது பெருமளவுக்கு தளர்ந்து போய்விட்டது. ஒரு கட்சிக்கு நிலையான வாக்குவங்கி ஒன்று இனிமேலும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாத அளவுக்கு அரசி யல் சஞ்சலமானதாகிவிட்டது.

தலைவரை ஏகமனதாக தெரிவுசெய் யும் தமிழரசு கட்சியின் பாரம்பரியமான நடைமுறையை பேணிக் காக்கக்கூடிய தாக தனது கட்சியின் மூத்த உறுப்பினர்க ளைக் கூட வழிக்குக் கொண்டுவர முடி யாத அளவுக்கு ஒரு கையறு நிலையி லேயே இறுதிக் காலத்தில் சம்பந்தன் இருந்தார். கடந்த வருட முற்பகுதியில் நடைபெற்ற தலைவர் தேர்தலுக்கு பின் னர் தமிழரசு கட்சிக்குள் நிலவும் அருவ ருக்கத்தக்க உட்பூசல் தமிழர் அரசியலில் ஒன்றிணைந்த செயற்பாடுகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்துவருகிறது.

ஆனால், போரின் முடிவுக்கு பின்ன ரான தமிழ் மக்களின் நிலையை உணர்ந் தவராக சம்பந்தன் வெறுமனே உணர்ச் சிவசமான சுலோகங்களை உயர்த்திப்பி டித்து மீண்டும் நடைமுறைச் சாத்திய மற்ற அரசியல் பாதையைக் காட்டுவ தற்கு ஒருபோதும் முயற்சித்ததில்லை. தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை பொறுத்தவரை, அடிப் படைக் கோரிக்கைகளில் விட்டுக் கொடுப் பைச் செய்யாமல் தேசிய இனப் பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையாகவே இருக்க முடியும் என்பதில் அவர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

அதேவேளை, நிரந்தரத்தீர்வை நோக் கிய பயணத்தில் இடைக்கால ஏற்பாடாக அரசியலமைப்புக்கான 13 வது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாணசபைகளை இயங்கவைக்க வேண் டும் என்று அரசாங்கங்களை இடைய றாது வலியுறுத்த சம்பந்தன் தவறியதில்லை. சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுட னான சந்திப்புக்களிலும் அந்த நிலைப் பாட்டை தெளிவுபடுத்த அவர் தவறிய தில்லை. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு அரசி யல் தீர்வு வழங்கப்படாவிட்டால், வெளி யக சுயநிர்ணய உரிமையின் அடிப்படை யில் தீர்வொன்றைக் கோருவதற்கு அவர் களுக்கு உரிமை இருக்கிறது என்பது இறுதிவரையான அவரது நிலைப்பா டாக இருந்தது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணும் விடயத்தில் சம்பந்தன் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் மீது அளவு கடந்த நம்பிக்கையை வைத்திருந்தார். இலங்கை அரசாங்கம் மீது சர்வதேச சமூ கம் நெருக்குதலை பிரயோகிக்க வேண் டும் என்பதும் அவரது இடையறாத வலி யுறுத்தலாக இருந்து வந்தது. சிங்கள மக் களின் ஆதரவு இல்லாமல் அரசியல் தீர்வை காண்பது சாத்தியமில்லை என்பதும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசை களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் சம்பந்தனின் உறுதி யான நம்பிக்கையாக இருந்தது.

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற தலைவர்களுடன் ஒப்பிடும்போது சிங் கள சமூகத்தின் கடுமையான வெறுப் புக்கு உள்ளாகாத ஒரு மிதவாத தமிழ்த் தலைவராக சம்பந்தன் இறுதிவரை விளங் கியதை அவருக்குரிய ஒரு 'தனித்துவமாக' கூறலாம். ஆனால், தனது தலைமுறை யைச் சேர்ந்த தமிழ்த் தலைவர்களைப் போன்றே தமிழ் மக்களுக்கு அமைதியா னதும் கௌரவமானதுமான வாழ்வை உறுதி செய்யக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுக்க முடியாதவ ராகவே சம்பந்தனும் இவ்வுலகில் இருந்து விடைபெற்றார்.

பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரைக ளிலும் அரசாங்க தலைவர்களுடனும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் மற் றைய எந்தவொரு தமிழ் அரசியல்வாதி யும் செய்யாத வகையில் சம்பந்தன் இந் திய - இலங்கை சமாதான உடன்படிக் கைக்கு பிறகு அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து வரிசைக் கிரமமாக விளக்கம் அளிப்பது சம்பந்தனின் வழக்கமாக இருந்தது வந்தது.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பதவிக் காலத்தில் 1991 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க தலை மையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியில் இருந்தபோது 2000 ஆம் ஆண் டில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியல மைப்பு யோசனைகள், மகிந்த ராஜபக்ச வின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமை யிலான சர்வகட்சி பிரதிநிதித்துவ குழு வின் யோசனைகள், மைத்திரிபால சிறி சேன - ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசாங்க காலத்தில் முன்னெடுக் கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை ஆகியவற்றை சம்பந்தன் தவறாது குறிப்பிடுவார்.

சமாதான உடன்படிக்கைக்கையை தொடர்ந்து மாகாண சபைகள் அமைக் கப்பட்ட பின்னரும் கூட, அரசியல் தீர்வை நோக்கிய அந்த செயன்முறைகளை முன்னெடுத்ததன் மூலமாக 13 வது திருத் தம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையமுடியாது என்பதை அரசாங்கங் களே ஏற்றுக் கொண்டிருந்தன என்பதை நிரூபிப்பதே சம்பந்தனின் நோக்கமாக இருந்தது.

ஜனாதிபதிகளுடனும் சிங்கள அரசி யல்வாதிகளுடனும் சுமுகமான உறவை சம்பந்தன் கொண்டிருந்தது குறித்து தீவிர தமிழ்த் தேசியவாத சக்திகள் கடுமையான


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆதரவுடன் தேசிய தீர்மானங்களை எடுப்பதன் மூலம் நிலைபேறான பயன் விளைவுகளை கொண்டுவர முடியும்!



கலாநிதி ஜெகான் பெரேரா



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க்கை வரவேற்றதிலும் அவரி டமிருந்து ஆலோசனையைப் பெறுவதில் உள்ள ஆர்வத் திலும் சர்வதேச மனித உரிமைகள் சமூகத்துடன் வெளிப் படைத் தன்மையாக நடந்துகொள்வதில் அரசாங்கத் துக்கு இருக்கும் விருப்பத்தைக் காணக்கூடியதாக இருக் கிறது. நாட்டை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மேம்படுத்துவதிலும் மனித உரிமைகளை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதிலும் அரசாங்கத் தின் நோக்கத்தின் நேர்மையையும் அது பிரதிபலிக்கிறது.

தாகூரின் கனவுடன் அரசாங்கம் வாழ்கிறது போன்று தோன்றுகிறது. 'எங்கெல்லாம் மனதில் அச்சமின்றி தலையை நிமிர்த்திநிற்க முடிகிறதோ, எங்கெல்லாம் அறிவு சுதந்திரமானதாக இருக்கிறதோ அங்கெல்லாம் உலகம் குறுகிய உள்ளக சுவர்களினால் சிதறல்களுக்கு உள்ளாகாமல் இருக்கிறது." இந்த பின்புலத்தில், சர்வ தேச ஆதரவு - சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின் வடிவத்தில் வந்தாலென்ன, ஐக்கிய நாடுகள் அல்லது தனிப்பட்ட நாடுகளின் உதவியின் வடிவத்தில் வந்தா லென்ன - அவை வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஐக்கிய நாடுகளும் மற்றைய சர்வதேச மனித உரிமை கள்சார் அமைப்புக்களும் முற்றுகைக்கு உள்ளாகியிருக் கும் ஒரு நேரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இலங்கை விஜயம் இடம்பெற்றிருக்கிறது. உலகின் மிகவும் பலம்பொருந்திய நாட்டின் தலைவர் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து தனது நாட்டை விலக் கிக் கொண்டிருப்பது மாத்திரமல்ல, மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றங்களை கையாளும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புக்க ளுக்கான நிதியுதவிகளை நிறுத்துமாறும் சிபாரிசு செய்தி ருக்கிறார்.

இலங்கை உட்பட பல்வேறு நாடுகளின் போர்க்குற் றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்களை உலக ளாவிய ரீதியில் கையாளும் சுமார் 24 செயற்திட்டங்க ளுக்கான நிதியுதவியையும் நிறுத்துமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அலுவலகம் சிபாரிசை அறிவித் திருக்கிறது.

சர்வதேச மனித உரிமைகள் நியமங்கள் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்தே அவற்றை பிரயோகிப்பதில் முர ணில்லாத அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகிறது. தன வந்த நாடுகளுக்கும் பலம்பொருந்திய நாடுகளுக்கும் ஒரு வகையான விதிகளும் வறிய நாடுகளுக்கும் பலவீனமான நாடுகளுக்கும் வேறு விதமான விதிகளும் பிரயோகிக்கப் படுவதை பொதுவில் அவதானிக்கக் கூடியதாக இருக்கி றது.

சர்வதேச சட்டங்களும் நியமங்களும் அப்பட்டமாகவே தற்போது மீறப்பட்டு வருகிறது. உலகின் மிகவும் பலம் பொருந்திய நாடுகள் சட்டங்களையும் நியமங்களையும் மீறும்போது அதை தடுப்பதற்கு ஏனைய நாடுகளினால் எதையும் செய்யமுடியாமல் இருக்கிறது. இந்த சமச்சீ

**எதிரணியையும் சிவில் சமூகத்தையும் உள்ளடக்கியதாக நல்லிணக்கம் தொடர்பான தேசிய பேச்சுவார்த்தைக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலம் அரசாங்கம் வெளி நெருக்குதலை உள்நாட்டு உத்வேகமாக மாற்றமுடியும் என்பதுடன் பக்கச்சார்பான கட்சி அரசியலுக்கு அப்பால் நிலைபேறான கருத்தொருமிப்பு இணக்கத்தீர்வை வரைய முடியும்.**

ரற்ற போக்கை வேதனைக்குரிய வகையில் காசாவிலும் உக்ரெயினிலும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கி றது. ஏனைய நாடுகளின் விவகாரங்களிலும் இதே போக்கே கடைப்பிடிக்கப்படும் ஆபத்து இருக்கிறது.

இத்தகைய ஆபத்து மிகுந்த பின்புலத்தில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் டேர்க் மிக வும் நம்பிக்கை தரும் உற்சாகமான பேச்சுடன் தனது இலங்கை விஜயத்தை தொடங்கினார். உலகின் நன்மைக் காக ஐக்கிய நாடுகள் ஆதரித்து நிற்கின்ற விழுமியங்களின் நோக்கையும் சர்வதேச மனித உரிமைகள் முறைமையை மேணிக்காக்க வேண்டிய தேவையையும் அவர் தெளி வாக விளக்கினார்.

இலங்கையில் நடத்திய பல பொதுச் சந்திப்புகளில் முதலாவதில் அவர் 300 க்கும் அதிகமான அரசாங்க பிர திநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் அதிகாரிகளைக் கொண்ட சபையொன் றின் முன்பாக உரையாற்றி சாத்தியமான ஒரு உலகப்பார் வையை வழங்கினார். சர்வதேச மனித உரிமைகள் முறைமை உறுதியாகப் பின்பற்றப்படுவதை உறுதிசெய் வதில் தங்களுக்கு இருக்கின்ற பங்கை பல நாட்கள் நிறை வேற்றுவதில்லை என்பதை கூறிவைக்கவும் அவர் விரும் பினார்.

ஐக்கிய நாடுகள் அதன் மனித உரிமைகள் உயர்ஸ்தா னிகரின் நிகழ்ச்சித்திட்டத்தை கட்டுப்பாடுகள் இன்றி சுதந்திரமாக ஒழுங்கு செய்வதற்கு அனுமதித்ததில் இலங்கை அரசாங்கம் தாராளவாத மனப்பான்மையுடன் நடந்து கொண்டது. அரச அனுசரணையுடன் கொழும்பு பண் டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்ட பத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பகிரங்க கூட்டத்தை இளம் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் கருத்துக் களை அறிந்து கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் பயன்படுத் தியது.

அவர்கள் எல்லோரும் மனித உரிமைகள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பிலான அரசாங்கத்தின் அணுகு முறையை ஒருமித்த குரலில் கண்டித்து விமர்சனம் செய் தனர். அரசாங்கத்தின் பெருவாரியான குறைபாடுகளை சுட்டிக்காட்டிய அவர்கள் போர்க்குற்ற விசாரணைகளில் நேரடியான சர்வதேச பாத்திரத்துக்கு அழைப்பு விடுத்த னர். தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங் களும் அத்தகைய நேரடியான சர்வதேச பாத்திரத்தை நிராகரித்த போதிலும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் அந்த கோரிக்கையை மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் முன்னிலையில் வலியுறுத் தினர்.

கடுமையான இரகசியமாக பல வருடங்களாக இருந்து தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதிய செம்மணி புதைகுழிகளுக்கு உயர்ஸ்தானிகரை அழைத்துச் செல்வ தற்கும் ஐக்கிய நாடுகளை அரசாங்கம் சுதந்திரமாக அனு மதித்தது. காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பி னர்களும் அவர்களின் சார்பில் தேசியரீதியாகவும் சர்வ தேச ரீதியாகவும் ஆதரவைத் திரட்டும் முயற்சிகளில் ஈடுபடும் சிவில் சமூக அமைப்புக்களும் உயர்ஸ்தானிக ரின் விஜயத்தினபோது செம்மணியில் பிரசன்னமாகியி ருந்தனர்.

ஒரு பெண், குழந்தை, நீலநிறப் பாடசாலைப் பை அழிந்துபோகாமல் இருக்கும் ஒரு சிறுமி அல்லது சிறு வன் உட்பட இதுவரையில் முப்பதுக்கும் அதிகமான எலும்புக்கூடுகளை தடயவியல் அகழ்வாராய்ச்சியாளர் கள் தோண்டி எடுத்திருக்கிறார்கள். சர்வதேச செஞ்சி லுவை சங்க கமிட்டியிடம் இருக்கும் தரவுகளுடன் ஒப் பிட்டு மரபணுச் சோதனை செய்யப்பட வேண்டும் என்று காணாமல் போனோர் விவகார அலுவலகம் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மன்னாரிலும் மாத்த ளையிலும் ஏற்கெனவே புதைகுழிகள் தோண்டப்பட்ட போது நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு இருக்கவில்லை என்பதை இது வெளிக்காட்டுகிறது.

போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறு திசெய்வதற்கான முயற்சிகள் தொடருவதை உறுதி செய் வதன் மூலமாக இலங்கையின் நல்லிணக்கச் செயன்முறை களுக்கு ஆதரவளிப்பதில் ஐக்கிய நாடுகளின் பாத்திரத்தை பலப்படுத்துவதாக செம்மணியில் கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றியபோது உயர்ஸ்தானிகர் உறுதிய ளித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் கீழ் ஜெனீவாவில் அமைக்கப்பட்டிருக் கும் சான்றுகள் திரட்டும் பொறிமுறை தொடர்ந்து இயங் கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இவையெல்லாம் தேசிய பொறிமுறைகளினால் செய் யப்பட்ட பணிகளுக்கு உதவியாகவும் ஆதரவாகவும் அமையும் என்று உயர்ஸ்தானிகர் கூறினார். உள்நாட்டில் திரட்டப்பட்ட சான்றுகள், இலங்கையில் அமைக்கப் பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் வலியுறுத்திவரு கின்ற ஒரு கலப்பு நீதிமன்றம் உட்பட தகுதிவாய்ந்த வெளி நாட்டு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவதற்கு ஜெனீவா பொறிமுறை வசதிசெய்யும் என்று அவர் தெளிவுபடுத்தி னார்.

ஆனால், போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூ றலை உறுதிசெய்வது பற்றிய உறுதிமொழிகள் ஒப்பே றுமா என்பது குறித்து வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் கணிசமானளவு சந்தேகம் நிலவுகிறது. காசாவிலும் உக் ரெயினிலும் சர்வதேச சட்டங்கள் அலட்சியம் செய்யப் பட்டு தொடர்ச்சியாக குடிமக்கள் படுகொலைகள் இடம் பெற்று வருகின்றன என்பதையும் அவற்றை தடுத்து நிறுத்தி போர்க் குற்றவாளிகளை நீதியின் முன்னிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகளோ அல்லது முன்னணி நாடுகளோ எதை யும் செய்யவில்லை என்பதையும் உலகின் ஏனைய பாகங் களில் உள்ள மக்களைப் போன்றே வடக்கு, கிழக்கு மக் களும் அறிவார்கள். இந்த முரண்பாடுகளுக்கு மத்தியி லும், கடந்த காலத்தைக் கையாளுவது தொடர்பில் சர்வ தேச சமூகத்தின் ஆதரவுடன் முன்னோக்கிச் செல்வதில் அரசாங்கம் திறந்த மனதுடன் இருக்கின்றது போன்று தெரிகிறது.

கடந்த காலத்தை கையாளுவதில் இலங்கைக்கு நல்ல ஆதரவு வழங்கப்படும். இலங்கையை போன்று நீண்ட கால உள்நாட்டு மோதல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களின் அனுபவங்களை கடந்துவந்த ஏனைய பல நாடுகளும் இருக்கின்றன. இது விடயத்தில் பயன்படுத் தக்கூடிய பெருமளவு சர்வதேச அனுபவமும் நிபுணத்து வமும் இருக்கின்றன. சர்வதேச சமூகம் அதன் ஆலோச னையையும் நிபுணத்துவத்தையும் வழங்கலாம், ஆனால், இறுதியில் தீர்மானங்களை இலங்கையர்களே எடுக்க வேண்டியது அவசியமாகும். எந்தவொரு சர்வதேச உத வியுமே தேசிய ஆற்றலை வலுப்படுத்துவதாகவும் ஒவ் வொரு நாட்டுக்கும் உரித்தான தனித்துவத்தின் பின்பு லத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருக்க வேண்டும். இது சர்வதேச ஆதரவுடனான தேசிய முன் னெடுப்பு என்ற கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா. சம்பந்தன் சில குறிப்புக்கள்



யதீந்திரா



சம்பந்தன் காலமாகி ஓராண்டு முடிந்துவிட்டதா? நண்பரும் மூத்த பத்திரிகையாளருமான அண்ணன் தனபாலசிங்கம் சம்பந்தன் பற்றி கேட்கும் வரையில் சம்பந்தன் என்னும் பெயரே எனது நினைவில் இல்லை. பின்னர்தான், சம்பந்தன் பற்றி ஏதாவது கூட்டங்கள் நடந்ததா என்று தேடிப்பார்த்தேன் - அப்படி ஒன்றும் நடந்திருக்கவில்லை - எல்லோருமே அவரை மிகவும் இலகுவாக மறந்துவிட்டனர்.

சம்பந்தன் அரசியலை தீர்மானித்த காலத்தில் அவரது தலைமைத்துவம் போற்றப்படக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை. அவரால் செய்யக் கூடியதை அவர் செய்யவில்லை என்பதே எனது விமர்சனமாக இருந்தது. அது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்க ளில் எழுதியிருக்கின்றேன். ஆனால் சம்பந்தன் அரசி யலை தீமானிக்கும் வரையில் தமிழ் தலைவர் என்னும் அடையாளத்தை தக்கவைத் திருந்தார். தன்னை மீறி எத னையும் செய்ய முடியாது என் னும் நிலைமையை கட்சிக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும் வைத்திருந்தார். இப்போது வீரவசனம் பேசும் தமிழரசு கட்சியின் அரசியல்வாதிகள் அனைவருமே அப்போது சம்பந்தனுக்கு முன்னால் மகுடிக்கு நெளியும் பாம்புகளாக இருந்தவர்கள் தான். அந்த வகையில் நோக் கினால் சம்பந்தன் இருக்கும் வரையில் தமிழர்களின் அரசியல் தலைவர் யார் என்னும் கேள்விக்கான பதிலாக அவர் இருந்தார் என்பது உண்மை.

சம்பந்தன் என்னும் அரசியல்வாதியை முதல் முத லாக நான் சந்தித்த நாளை இப்போது நினைத்துப் பார்த் தால் தனிப்பட்ட ரீதியில் ஒரு நகைச்சுவை அனுவ பத்தை தருவதுண்டு ஆனால் அரசியல்ரீதியில் நோக்கினால் அது மிகவும் கனதியானது. படித்தவர்கள் அதிலும் அப் புக்காத்துக்கள், ஆங்கிலத்தில் புரள்பவர்கள் என்றெல்லாம் தங்களை எண்ணிக் கொண்டவர்கள் எந்தளவு சிறுப்பிள்ளைத்தனமான நம்பிக்கையில் காலத்தை கடத்தியிருக்கின்றனர் என்ப தற்கான சாட்சியாகவே அதனை நான் எண்ணுவதுண்டு.

நான் 1995ம் ஆண்டு, எனது கல்விப் பொதுத் தராதர உயர்தர பரிட்சை எழுதிவிட்டு, கால் போன போக்கில் அலைந்து கொண்டிருந்த நாட்கள். 1996இல் மீண்டுமொரு முறையும் பரிட்சை எழுதிப் பார்த்தேன். அப்போது பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்றெல்லாம் படிக்க வுமில்லை. எனது தாயார் ஒரு அரசாங்க ஊழியர். வறிய குடும்பம்தான் என்றா லும் சாப்பாட்டுக்குப் பிரச்சினையிருக்கவில்லை. இப்படியான ஒரு நாளில்தான், உன்னை சம்பந்தன் ஐயாவிடம் கூட்டிக் கொண்டு செல்ல வேண்டும் என்று எனது தாயார் கூறினார். திருகோணமலை நகரத்திலுள்ள கந்தசுவாமி கோவிலுக்கு அருகைமையிலுள்ள சம்பந்தனின் இல்லத்திற்கு சென்றோம். பிராமணிய தோற்றத்தில் ஒருவர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அவர்தான் சம்பந்தன்.

எனது தாயார் என்னை காண்பித்து, படித்துவிட்டு இருக்கின்றார் - அப்பாவும் இல்லை என்று தொடங்கி, வேலைக்கு உதவி செய்யுமாறு கூறினார். அன்று சம்பந்தன் கூறிய பதில் இப்போதும் எனது மனதில் பசுமரத்தாணி போன்று இருக்கின்றது. தங்கச்சி இது போன்ற சிறிய வேலைகளில் நான் ஈடுபடுவதில்லை - நான் அரசியல் தீர்வுக்கான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன் - நாங்கள் இப்போது சுவிஸ் அரசியல் யாப்பை ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் - எதுக்கும் விபரங்களை தந்துவிட்டுச் செல்லுங்கள். உண்மையில் எனக்கும் எனது தயாருக்கும் அப்போது சுவிட்சர்லாந்து என்றொரு நாடு இருப்பதே தெரியாது.

காலம் எல்லோருக்குமுரியது. ஆற்றலுள்ளவர்கள் அதில் சாரி செய்யலாம். எனது இலக்கிய ஈடுபாடு அரசியலின் பக்கமாக என்னை தள்ளிவிட்டது. வேலை வாய்ப்பு கேட்டுச் சென்ற சம்பந்தனுடன் அரசியல் பேசும் காலமும் கனிந்தது. 2015இல் நாடாளுமன்றத் தேர்தலில், சம்பந்தனுடன் இணைந்து திருகோணமலையில் போட்டிடும் நிலைமையும் உருவாகியது.

2010 நாடாளுமன்றத் தேர்தலின் போதுதான், நேர்காணல் ஒன்றுக்காக முதல் முதலாக சம்பந்தனை சந்தித்தேன். அந்த நேர்காணலில் சம்பந்தன் பல விடயங்களை பகிர்ந்து கொண்டார். செல்வநாயகத்தின் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பில் நான் கேள்வியை திருப்பிய போது ஒப் த ரெக்கோர்ட் என்றுவிட்டு, அது இந்தியாவிற்கு தேவையென்றால் வந்திருக்கும் என்றார்.

சம்பந்தனை அளவிடுவதற்கு அவரது அரசியல் வாழ்வை, 2009இற்கு முன்னர், 2009இற்கு பின்னர் என்று கட்டாயம் பிரித்தேயாக வேண்டும். கட்டாயம் என்று கூறுவதற்கு ஒரு காரணமுண்டு. 2009இற்கு முன்னர் தமிழர் அரசியலில் சம்பந்தன் ஒரு அரசியல் ஆளுமையாக இருக்கவில்லை - இருக்கவும் முடியாது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலத்திலும் சம்பந்தன் அரசியலை தீர்மானிக்கும் ஒரு நபராக இருந்திருக்கவில்லை. எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கு பின்னரான தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது அமிர்தலிங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாகவே இருந்தது. அப்படிப் பார்த்தால் ஈழ அரசியல் வரலாற்றில், சம்பந்தனின் காலம் என்பது 2009இற்கு பின்னரான காலம்தான். அவர் நோய் வாய்ப்பட்டு நான்கு சுவர்களுக்குள் முடங்கும் வரையில் ஈழத் தமிழர் அரசியல் எதிர்காலம் என்பது அவரது எண்ணங்களிலும் நடவடிக்கையிலுமே கட்டுண்டு கிடந்தது.

ஈழ அரசியலில் சம்பந்தனுக்கு ஒரு தனித்துவமான இடமுண்டு. அதாவது, ஈழத் தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி, தமிழர் அரசியலுக்கு தலைமை தாங்கினார் என்றால் அது சம்பந்தன் மட்டும்தான். அவ்வாறானதொரு நிலைமை இனியேற்படும் என்று நான் நம்பவில்லை. ஆனால் அரசியல் பண்பில் சம்பந்தனுக்கும் வடக்கிலிருந்து அரசியலை வழிநடத்தியவர்களுக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை. அனைவருமே அரசியலில் தவறுகளை விதைத்துச் சென்றவர்கள்தான் - எதையுமே அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லாதவர்கள்தான் - தங்களால் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது என்பது பற்றிய தரிசனமின்றியே பயணம் செய்ய எத்தணித்தவர்கள் தான். செல்வநாயகம் தொடக்கம் பிரபாகரன் வரையில் அனைவரும் விட்டுச் சென்றிருப்பது தோல்வி ஒன்றை மட்டும்தான். இறுதியில் சம்பந்தனும் அந்தத் தோல்வியை பின்தொடர்ந்து, தோல்வியில் மூழ்கி, தன் காலத்தை நிறைவு செய்து கொண்டார்.

சம்பந்தன் அரசியலை தீர்மானித்த காலத்தில் அவரை பலர் பல விதமாக விமர்சித்ததுண்டு. அவர் அரசின் நிகழ்சிநிரலுக்கு துணை போகின்றார், சர்வேதச விசாரணையை திசைதிருப்புகின்றார், ஒற்றையாட்சிக்குள் தமிழரின் அரசியல் எதிர்காலத்தை முடக்கும் சதிக்கு துணை போகின்றார் என்றெல்லாம் அவர் மீது கற்கள் வீசப்பட்டன. ஆனால் உண்மையில் சம்பந்தன் அரசியலில் செய்த தவறு என்று ஒன்றைச் சொல்ல முடியும் என்றால் அது ஒன்றே ஒன்றுதான் - அதாவது, அவரால் செய்யக் கூடி யதை அவர் செய்ய முயற்சிக்க வில்லை. அவரால் என்ன செய்தி ருக்க முடியும்? அவர் இருக்கின்ற போதே இது தொடர்பில் போாதி யளவு எழுதியிருக்கின்றேன். இந்த இடம்தான் சம்பந்தனுக்கு எதிராக என்னை திருப்பிய இடமும்.

யுத்தத்திற்கு பின்னரான அரசி யல் காலகட்டத்தை எடுத்து நோக் கினால் சம்பந்தன் தென்னிலங் கையோடு கௌரவமாகப் பேசக் கூடிய காலமாக இருந்தது, 2015 - 2018 வரையான காலப்பகுதி மட்டும்தான். இந்தக் காலத்தில் நிலைமைகள் ஒப்பீட்டடிப்படை யில் மிகவும் சாதகமாக இருந்தது. இந்தக் காலத்தில் அரசியலமைப் பின் பதின் மூன்றாவது திருச்சட்டத்தை அமுல்படுத்தும், அதிலிருந்து பயணிக்கும் விடயத்தை நகர்த்தியிருக்க முடியும். அதற்கான வாய்ப்பு கனிந்திருந்தது. ரணிலும் அதனை எதிர்த்திருக்கப் போவதில்லை மைத்திரிபால சிறிசேனவும் அதனை எதிர்த்திருக்கப் போவதில்லை ஏன் மகிந்த ராஜபக்சவும் எதிர்த்திருக்கப் போவதில்லை. இந்த விடயத்திற்கு தலைமை தாங்கக் கூடிய ஆற்றலும் அங்கீகாரமும் சம்பந்தனுக்கு இருந்தது. இந்த விடயத்தில் இந்திய ஆதரவையும் கோரியிருக்கலாம் - ஆனால் சம்பந்தனோ புதிய அரசியல் யாப்பு என்னும் மாய மானைத் தேடும் முயற்சியில் காலத்தை விரயம் செய்தார். நீங்கள் மாய மானுக்கு பின்னால் செல்கின்றீர்கள் என்று கூறியவர்களை ஏளனமாகப் பார்த்தார். ஆனால் காலமோ சம்பந்தனை ஏளனமாகப் பார்த்தது.

அவ்வாறானதொரு அரசியல் யாப்பு வரவே முடியாது என்பதை என்னைப் போன்றவர்கள் கூறிக் கொண்டிருந்தோம் - இன்னும் பலரும் அது தொடர்பில் அப்போது பேசியிருந்தனர். "பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தை தாண்டி நாங்கள் எங்கோயோ போய்விட்டோம் என்பதே சம்பந்தனின் பதிலாக இருந்தது" ஆனால் எங்கும் போகவுமில்லை - போகவும் முடிய வில்லை - போகவும் முடியாது என்பதே இன்றும் ஈழத் தமிழருக்கு முன்னாலுள்ள அரசியல் யதார்த்தமாக இருக்கின்றது. வேண்டுமானால் அதனையும் இழந்து இன்னும் கீழ் நிலைக்குச் செல்வது நடக்கலாம்.

சம்பந்தன் படித்தவர், அரசியலில் நீண்ட அனுபவமுள்ளவர், தென்னிலங்கை தலைவர்களை நன்கறிந்தவர் - இதற்கு மப்பால் இந்தியாவின் கரிசனைகளை அறிந்தவர். ஆனாலும் சம்பந்தனால் அர சியலை யதார்த்தபூர்வமாக கையாளுவ தில் வெற்றிபெற முடியவில்லை. இது சம்பந்தனுடைய தோல்வி மட்டும்தானா? நிச்சயமாக இல்லை. சம்பந்தனின் தவறுக்குள் செல்வநாயகத்தின் தவறுகள், அமிர்தலிங்கத்தின் தவறுகள், பிரபாகரனின் தவறுகள் என அனைத்தும் அடங்கியிருக்கின்றது. முன்னையவர்களின் அரசியல் தவறுகளிலிருந்து தனது சிந்தனையையும் செயலையும் திட்டமிட சம்பந்தன் முயற்சிக்கவில்லை - அது பற்றிய உணர்வும் அவருக்கிருக்கவில்லை. இதனால் அவரது காலமும் தோல்வியின் காலமாக நீண்டு, முற்றுப்பெற்றது. ஈழ அரசியலில் முன்னைய தவறுகளின் நிழல் பின்தொடர அனுமதிக்கப்படும் வரையில், தோல்வியின் நிழலும் ஈழத் தமிழர்களை விட்டு விலகப் போவதில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகப் பையுடன் சிறுவன் எலும்புக்கூடு:


# செம்மணி புதைகுழியில் தோண்டத்தோண்ட வரும் எலும்புக்கூடுகள்!

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையில் யாழ்ப்பாணம் - செம்மணி - சித்துபாத்தி மனித புதைகுழியிலிருந்து சிறுவர்கள் உள்ளிட்ட 33 பேரின் மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த முதலாம் திகதி நடத்தப்பட்ட அகழ்வு பணிகளின் போது மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் கிடைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சித்துபாத்தி மனித புதைகுழியிலிருந்து இதுவரை 38 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மனித எலும்புக்கூடுகளில் பெரும்பாலான சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் காணப்படுகின்றமை பாரிய சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்ன நடக்கிறது?



நீல நிறத்திலான புத்தக பையுடன் அடையாளம் காணப்பட்ட சிறு குழந்தையொன்றின் எலும்புக்கூடு சில தினங்களுக்கு முன்பு முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.


இந்த எலும்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்ட இடத்திலிருந்து பாதணி மற்றும் குழந்தைகள் விளையாடும் பொம்மையொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டோர் சார்பில் புதைகுழி அகழ்வுப் பணிகளை மேற்பார்வை செய்யும் வழக்கறிஞர் ரனிதா ஞானராஜா தெரிவிக்கின்றார்.

'ஏற்கெனவே அடையாளப்படுத்தி பாடசாலை புத்தக பையுடன் இருந்த மனித உடல், முழுமையாக நாள் முழுவதையும் செலவிட்டு, நிலத்திலிருந்து வெளியில் எடுக்கப்பட்டுள்ளது, முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த குழந்தையின் உடலுடன் காலணியும், அதே நேரத்தில் சிறிய குழந்தைகள் விளையாடுகின்ற பொம்மை ஒன்றும் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது' என வழக்கறிஞர் ரனிதா ஞானராஜா தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணம் - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து கடந்த செவ்வாயன்று பின்னிப் பிணைந்த நிலையில் மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் ரனிதா ஞானராஜா குறிப்பிடுகின்றார்.

இந்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 5 எலும்புக்கூடுகள் காணப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக தென்படுகின்ற நிலையில், அந்த தொகுதியில் சரியாக எத்தனை எலும்புக்கூடுகள் உள்ளமை குறித்து தற்போதைக்கு சரியாக கூற முடியாது எனவும் அவர் கூறுகின்றார்.

'இன்றைய நாள் முழுவதும் நடந்த அகழ்வு பணிகளில் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்ததான மேலதிக 5 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எண்ணிக்கை எத்தனை என்பதை சரியாக சொல்ல முடியாது. அதுவொரு குழப்பமான முறையில் அந்த உடலங்கள் காணப்பட்டுள்ளன' என அவர் குறிப்பிடுகின்றார்.



யாழ்ப்பாணம் - செம்மணி பழைய மனிதப் புதைகுழி வழக்கையும், செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதைகுழி வழக்கையும் ஒன்றாக இணைந்து முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக பாதிக்கப்பட்டோர் சார்பில் புதைகுழி அகழ்வுப் பணிகளை மேற்பார்வை செய்யும் வழக்கறிஞர் ரனிதா ஞானராஜா தெரிவிக்கின்றார்.

'செம்மணி பழைய புதைகுழி தோண்டுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பிரதான சட்ட மருத்துவ அதிகாரி பெரேரா அகழ்வு நடந்த பிரதேசத்துக்கு வருகைத் தந்தார். தற்போது அகழ்வு பணிகளில் ஈடுபடுகின்ற சட்ட மருத்துவ அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடி கடந்த அகழ்வு பணிகளின் தகவல்களை வழங்கியிருந்ததை பார்க்கக் கூடியதாக இருந்தது.





'கிட்டத்தட்ட அந்த வழக்கும் இந்த வழக்கும் இரு வேறு வழக்குகளாக இருந்தாலும் இரண்டு வழக்கையும் தொடர்புப்படுத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது. இதனால், முறையான நீதிமன்ற அனுமதியுடன் குறித்த பழைய வழக்கை இந்த வழக்குடன் சேர்ந்து அழைப்பதற்கான நடவடிக்கைகளை பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் செய்வதற்கான கலந்துரையாடல் நடந்து கொண்டிருக்கின்றது' என அவர் குறிப்பிடுகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து யாழ்ப்பாணம் 1995ம் ஆண்டு காலப் பகுதியில் முழுமையாக மீட்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் பகுதியில் காணாமல் போனதாக கூறப்படுவோர் செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், செம்மணி பகுதியில் 1999-ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வு பணிகளில் போது அந்த பகுதியில் மனிதப் புதைகுழி காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து பெருமளவிலான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

இந்த செம்மணியை அண்மித்த பகுதியிலிருந்து தற்போது சித்துபாத்தி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டு அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த இரண்டு வழக்குகளையும் ஒரே வழக்காக முன்னெடுத்து செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக வழக்கறிஞர் ரனிதா ஞானராஜா தெரிவிக்கின்றார்.

சித்துபாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகள் மற்றும் ஆதாரங்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிலர் வெவ்வேறு விதங்களில் சித்தரித்து வருகின்றமையை சமூக வலைத்தளங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆதாரங்களை சித்தரிக்கும் செயல்பாடு தொடரும் பட்சத்தில், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளதாக, வழக்கறிஞர் ரனிதா ஞானராஜா தெரிவிக்கின்றார்.

'இந்த புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்படுகின்ற எலும்பு மாதிரிகளை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் ஊடாக பிழையான விதத்திலான படங்கள் சமூக வலைத்தளங்களிலும் பொதுவான தகவல்கள் வெளியிலும் பரப்பப்படுகின்றது. இதுவொரு குற்றவியல் விசாரணை நடவடிக்கை யின் ஊடாக நீதிமன்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றமையினால், இனிவரும் காலங்களில் அப்படியானது வருமாக இருந்தால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நாங்கள் உத்தேசித்திருக்கின்றோம்.' என அவர் குறிப்பிடுகின்றார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் ஊடாக படங்கள் வெளியிடப்படும் பட்சத்தில், அது விசாரணைகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் குழப்பகரமான நிலையை ஏற்படுத்தக்கூடும் என அவர் குறிப்பிடுகின்றார்.


அதனைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வழக்கறிஞர் மேலும் தெரிவிக்கின்றார்.

இலங்கைக்கான அதிகாரப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் வோல்கர் டர்க், செம்மணி பகுதிக்கு அண்மையில் சென்றிருந்தார்.

செம்மணி பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்ட மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்திய மனித உரிமை ஆணையாளர், நினைவு தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தியிருந்ததையும் காண முடிந்தது.

இலங்கையில் சுமார் 20க்கும் மேற்பட்ட மனித புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கடந்த வருடம் அறிக்கையொன்றின் ஊடாக அறிவித்திருந்த நிலையில், அந்த அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் மேலும் மூன்று மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி, கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழி மற்றும் யாழ்ப்பாணம் - சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி ஆகியன கடந்த ஒரு வருட காலத்துக்குள் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியாக பதிவாகியுள்ளன.



**புதைகுழிகள்**

யாழ்ப்பாணம் - துரையப்பா விளையாட்டு அரங்கம்
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி
யாழ்ப்பாணம் - மிருசுவில் மனிதப் புதைகுழி
கிளிநொச்சி - மனிதப் புதைகுழி
கிளிநொச்சி - கணேசபுரம் மனிதப் புதைகுழி
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மனிதப் புதைகுழி
முல்லைத்தீவு - 2 முல்லைத்தீவு மனிதப் புதைகுழி
மன்னார் - மன்னார் மனிதப் புதைகுழி
மன்னார் - திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி
குருநாகல் - நிகவரபிட்டிய மனிதப் புதைகுழி
கம்பஹா - மினுவங்கொட வல்பிட்ட அரச பண்ணை
கம்பஹா - எஸ்செல்ல மனிதப் புதைகுழி
கம்பஹா - வவுல்கெல்ல நித்தம்புல மனிதப் புதைகுழி
கொழும்பு - கோகந்தர மனிதப் புதைகுழி
கொழும்பு - பொல்கொட எரி மனிதப் புதைகுழி
மாத்தறை - அக்குரஸ்ஸ வில்பிட்ட மனித புதைகுழி
இரத்தினபுரி - இறக்குவானை - சூரியகந்தை மனிதப் புதைகுழி
மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி மனிதப் புதைகுழி
மாத்தளை - மாத்தளை மருத்துவமனை மனிதப் புதைகுழி
கண்டி - அங்கும்புர மனிதப் புதைகுழி
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி
கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழி
அரியாலை - சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறனான பணிகளுக்கான புதிய உறுப்பினர்களின் பங்களிப்பு!

கந்தையா அருந்தவபாலன்

தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன் பரப்புரைகளின்போது மிகமோசமாக ஒருவரையொருவர் வசைபாடியவர்கள் தேர்தலின் பின்னர் தேவைக்கேற்ப நண்பர்களாக மாறி கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி மன்றச் சபைகளின் பதவிகளைக் கைப்பற்றியதுடன் ஒருவழியாக அம்மன்றங்களின் சபைகளும் அமைக்கப்பட்டு, அவை தமது கன்னி அமர்வுகளையும் நடத்தத் தொடங்கிவிட்டன. இது அரசியல் முதிர்ச்சியா அல்லது சந்தர்ப்பவாதமா என்ற ஆய்வுகளை ஒருபுறந்தள்ளிவைத்துவிட்டு அம்மன்றங்களின் நோக்கங்களை உத்தம அளவில் அடைந்து கொள்வதற்கு அச்சபைகளை எவ்வாறு வினைத்திறனுடன் இயங்கவைப்பது என்று சிந்திப்பதே இப்போதைய தேவையாக உள்ளது. இதற்குத் தற்போதுள்ள சபைகளின் பலம், பலவீனம், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றினதும் தற்போதைய நிலைமைகளையும் கவனத்திற்கொண்டு செயற்படவேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரதும் பொறுப்பாக உள்ளது. குறிப்பாகத் தவிசாளர்கள், சபை உறுப்பினர்கள், அவர்களை வழிப்படுத்தும் கட்சிகள், மன்றங்களின் பணியாளர்கள் என அனைவரும் தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவது மிக அவசியமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய சபைகள் பல்வேறு பலங்களைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளிடம் ஒட்டுமொத்தமாகப் பெரும்பான்மை இருத்தல், எதிரெதிர் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த கட்சிகளிடம் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வும் உடன்பாடும், இலங்கைத் தேசியக் கட்சிகளிடம் மன்றங்களின் அதிகாரம் சென்று விடக்கூடாது என்ற அக்கட்சிகளின் பொதுநிலைப்பாடு, விட்டுப்பிடிப்பம் என்ற நோக்கில் இயன்றவரை தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அதேவேளை நல்ல விடயங்களுக்கு ஆதரவளிக்க விரும்பும் பலமுள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் இளைஞர்களாக இருப்பதுடன் ஏதாவது செய்யவேண்டும் என்ற முனைப்பு அவர்களிடம் காணப்படுதல், அனுபவமுள்ள பலர் சபைகளின் தவிசாளர்களாக இருத்தல், மன்றங்களின் கட்டமைக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகள் மற்றும் பணியாளர்கள் போன்ற பல சாதகமான விடயங்கள் காணப்படுகின்றன.

காணப்படும் பலங்களுக்கு சற்றும் குறைவில்லாத பலவீனங்களும் மறுபுறத்தில் காணப்படுகின்றன. ஒருசில சபைகளைத் தவிர பெரும்பாலான சபைகள் தனியொரு கட்சியிடம் அறுதிப் பெரும்பான்மை இன்றிப் பிறகட்சிகளில் தங்கியிருக்கும் தன்மை, உறுதியற்ற கூட்டுக்களும் கட்சிகளின் ஆதரவுகளும், தானாகக் கனியும் வரை சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குக் காத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி, அனுபவமற்ற மற்றும் உணர்ச்சிவசப்படும் இளம் உறுப்பினர்கள், அனுபவம் குறைந்த மற்றும் தனிநலன் மற்றும் கட்சிசார் நிலைப்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்க விரும்பும் உறுப்பினர்கள், கணிசமான சபைகளில் பெயரளவிலான தவிசாளர்கள் காணப்படுதல், ஏலவே ஊழல் மற்றும் தனிமனித ஒழுக்கம் பேணாதவர்களாக விமர்சிக்கப்பட்ட சில தவிசாளர்களும் உறுப்பினர்களும், வினைத்திறனற்ற மன்ற நிர்வாகம் மற்றும் முறைகேடுகள் என பலவீனங்களும் சபைகளிலும் மன்ற நிர்வாகத்திலும் நிறைந்துள்ளன.

ஒரு நிறுவனத்துக்கான வாய்ப்புகள் என்பவை அந்நிறுவனத்துக்கு வெளியில் இருந்து கிடைக்கக்கூடிய சாதகமான விடயங்களைக் குறிக்கும். அந்தவகையில் பிரதானமாக தற்போதுள்ள அரசாங்கத்தின் கொள்கைகள் சபைகளின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு உகந்த வாய்ப்பை அளிக்கும் நிலைமை காணப்படுகிறது. ஒப்பீட்டு ரீதியில் முன்னைய ஆட்சியாளர்களைவிட தற்போதைய ஆட்சியாளர்களின் குறைந்தளவிலான அரசியல் தலையீடுகள், சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மதிப்பளிக்கும் தன்மை போன்றன சபைகளின் தன்னாட்சிக்குக் கூடிய வாய்ப்பாகும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரவுகள் என்பவை அவை ஈட்டக்கூடிய வருமானங்களும் அரசின் கொடுப்பனவுகளுமாகும். சபைகள் சரியான முறையில் நியதிச் சட்டங்களையும் திட்டங்களையும் வரைவதன்மூலம் தத்தமது வருமானங்களை உயர்த்துவதற்கும் தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன. அதேபோல ஒப்புரவு அடிப்படையிலான அரசின் ஒதுக்கீடுகள் குறைவின்றிக் கிடைப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. தேசிய மக்கள் சக்தியினது தலைவைர்கள் தேர்தல் பரப்புரைகளின்போது "தமது அதிகாரத்தின்கீழ் வரும் சபைகளுக்கு மட்டுமே நிதி வழங்குவோம்" என்று கூறியிருந்தாலும் அக்கூற்று தேர்தலில் வெற்றியீட்டுவதற்கான ஒன்று மட்டுமே என்பதை மனங்கொள்ள வேண்டும். அரச ஒதுக்கீடுகளைவிடப் பொருத்தமான திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகளுக்கூடாக சிறப்புத் திட்டங்களுக்கு ( எ - டு: கழிவகற்றல் உபகரணங்கள், வடிகாலமைப்பு, சுகாதாரம், விளையாட்டு, சிறுவர் பூங்கா, நூலகம், பயிற்சிகள்) அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்களிடமிருந்தும் உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவற்றைவிட ஒற்றுமையுடன் நேர்மையாகவும் சிறப்பாகவும் செயற்படுமானால் சபையின் எந்தகைய முயற்சிக்கும் மக்கள் ஆதரவு இருக்குமென்பது திண்ணம்.

> கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்காக சபைகளை வழிநடத்துவதிலும் தலையிடுவதிலும் இருந்து தூரவிலகி இருப்பதே விரும்பத்தக்கது. கட்சித்தலைவர்களின் அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் அவசியமானவை. ஆனால் அவை மக்களின் நலன்சார்ந்தும் மன்றங்களின் வளர்ச்சி கருதியதாகவும் இருக்க வேண்டும்.



சபை எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களில் முக்கியமானது கட்சிகளின் தீர்மானங்களும் தலையிடுகளுமாகும். சபையின் எந்தவொரு தீர்மானத்துக்கும் தேவையான அறுதிப் பெரும்பான்மை என்பது ஏனைய கட்சிகளின் தயவிலேயே உள்ளது. தவிசாளர் தெரிவின்போது பின்பற்றிய நிலைப்பாட்டையே கட்சிகள் தொடர்ந்தும் பின்பற்றும் எனக்கூறமுடியாது. கூடியிருப்போர் பிரியவும் புதிய கூட்டுக்கள் உருவாகுவதற்குமான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது. தவிசாளர் தெரிவின்போது கட்சிகளின் நிலைப்பாட்டை வைத்து நோக்கும்போது எந்தக்கட்சியும் எவருடனும் கூட்டுச் சேரத்தயங்கப் போவதில்லை என்பதை ஊகிக்க முடியும். அதற்குத் தேவையான நியாயப்படுத்தல்களும் அக்கட்சிகளின் தலைவர்களிடம் தயாராகவே இருக்கும். தற்போது நடுநிலை வகிக்கும் தேசிய மக்கள் சக்தி பொருத்தமான சந்தர்ப்பம் உருவாகும்போது தனது நிலையை மாற்றிக்கொள்ளும் என எதிர்பாரக்க முடியும். அப்போது தம்மைத் தேசியவாதிகள் எனக்கூறிக் கொள்ளும் சில கட்சிகளின் தலைவர்கள் 'மக்கள் நலனுக்காகான ராஜதந்திரம்' எனக்கூறி அவர்களுடன் கூட்டுச் சேரவும் தயங்கமாட்டார்கள். மேலும் தற்போது அதிக சபைகளின் தவிசாளர் பதவிகளை வைத்திருக்கும் தமிழரசுக்கட்சியில் உட்கட்சிப் பூசல்கள் அதிகரித்து வருவதுபோலத் தெரிவதால் அக்கட்சியின் சில உறுப்பினர்கள் வேறுவேறு முடிவெடுக்கவும் கூடும். மேலும் கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பலர் அக்கட்சியின் உறுப்பினர்களாக முன்னர் இருந்தவர்கள் அல்லர். அதனால் அவர்களில் பலர் கட்சிக்கட்டுப்பாட்டை மீறவும் கூடும் என்பதை தவிசாளர் தெரிவுகளின்போது அவதானிக்க முடிந்தது. சபைகள் சிதறுமானால் அவை அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும். அப்போது 'கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தானடி' என்ற சித்தர் பாடலை பாடுவதைத் தவிர வேறு வழியிருக்காது. நாடு பொருளாதார பின்னடைவிலிருந்து மெதுவாகவே மீண்டு வருவதால் மன்றங்களுக்குக் கிடைக்கக்கூடிய அரச நிதியொதுக்கீடுகள் அடுத்துவரும் ஆண்டுகளில் மட்டுப்படுத்தப்பட்டதாவே இருக்கும் என்பதும் ஒரு பின்னடைவாகும்.

இவ்வறான சாதக பாதக நிலைமைகளில் சபைகளைச் சிறப்பாகவும் நீடித்தும் வழிநடத்துவது என்பது தவிசாளர்களின் திறமையிலும் உறுப்பினர்களின் மனப்பாங்கிலும் பெருமளவு தங்கியுள்ளது. உள்ளூராட்சியின் முக்கிய பணிகள் எவை என்பதையும் மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் உறுப்பினர்கள் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். உள்ளூராட்சிச் சபைகள் அரசியல் செய்வதற்கான இடமன்று. அதை மக்களும் எதிர்பார்க்கவில்லை. தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு எப்போதும் ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலே போதுமானது. அதற்காக உணர்ச்சி வசப்பட்ட கோசங்களும் தீர்மானங்களும் அவசியமானவையன்று. சில சபைகளில் தவிசாளர், உறுப்பினர்களின் வெளிப்பாடுகளும் தீர்மானங்களும் வரவேற்கும்படியாக இல்லை. சிலர் மாகாண சபைத்தேர்தல் வேட்பாளர் கனவில் சபைகளில் ஜனரஞ்சக செயற்பாடுகளைச் செய்ய விரும்புகிறார்கள் போலத் தெரிகிறது. மக்களின் நலன்கருதிய சிறப்பான செயற்பாடுகளே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு எப்போதும் அவர்களை வழிப்படுத்தும் என்பதுடன் உறுப்பினர்களின் மதிப்பை மக்களிடத்தே உயர்த்தும் என்பதுமே உண்மை. அதற்கு மேலாக சபைகளை அரசியல் மேடையாக மாற்ற முயன்றால் மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதுடன் தற்போது ஆதரவளிக்கும் கட்சிகள் சில அதிலிருந்து பின்வாங்கும் நிலையும் தோன்றக்கூடும். கவனம் முழுவதும் அவ்வாறான செயற்பாடுகளை நோக்கிக் குவிக்கப்படுமாதலால் வினைத்திறனான சபை நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

உள்ளூராட்சிச் சபைகள் கிராம, நகர மட்டங்களில் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை அந்தந்த பிரதேச கள நிலைமைகளுக்கு உகந்த வகையில் அப்பிரதேச மக்களின் பிரதிநிதிகளால் தீர்மானிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கான ஜனநாயக வழியிலான ஒரு கீழ்மட்டத் தன்னாட்சி அமைப்பாகும். அங்கு ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வகைப்பாட்டுக்கு இடமில்லை. உண்மையில் அது ஊர்மக்களின் கூட்டுக் குழுவாகும். அவற்றை மறந்து அதில் அரசியல் புகுந்தமை துரதிஷ்டமானது. இங்கு வேண்டுவது தனிநபர், கட்சி சார் நலன்களல்ல. ஒற்றுமை, கூட்டுணர்வு, கூட்டுச் செயற்பாடுகள் போன்றவையே. இதற்கு விட்டுக்கொடுப்பும் பங்கெடுப்பும் மிகமுக்கியமானவை. தாம் தனிநபர்களல்ல தமது பிரதேச மக்களுக்கான முதன்மைக் கூட்டுக்குழு என்பதை ஒவ்வொரு உறுப்பினரும் புரிந்து கொள்ளவேண்டும். உறுப்பினர் ஒருவரின் சாதனையும் வேதனையும் சபை முழுவதற்கானது என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். உறுப்பினர்கள் தனிநபர்களைத் திருப்திப்படுத்த முனைவதை விடுத்து மக்களைத் திருப்திப்படுத்துவதை முதன்மை நோக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுக்காக சபைகளை வழிநடத்துவதிலும் தலையிடுவதிலும் இருந்து தூரவிலகி இருப்பதே விரும்பத்தக்கது. கட்சித்தலைவர்களின் அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் அவசியமானவை. ஆனால் அவை மக்களின் நலன்சார்ந்தும் மன்றங்களின் வளர்ச்சி கருதியதாகவும் இருக்க வேண்டும். கட்சித் தலைவர்கள் தமது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான பொம்மலாட்டத்தைத் தவிர்க்கவேண்டும். ஏலவே தவிசாளர்கள் தெரிவில் தகைமையானவர்களை விடுத்து தமக்கானவர்களையே கட்சித் தலைவர்கள் முன்மொழிந்தனர் என்ற பரவலான குற்றச் சாட்டுகளும் உள்ளன. அக்குற்றச்சாட்டுத் தவறு என்பதை தவிசாளர்களும் கட்சித்தலைவர்களும் தமது செயற்பாடுகளால் நிரூபிக்கவேண்டும். அதேபோல உறுப்பினர்கள் அனைவரும் நபர் என்பதைப் பார்க்காது தவிசாளர் என்ற பதவியை மதிக்கவேண்டும். குறையில்லாத நபர்கள் என்று எவருமில்லை. ஆனால் கூட்டு மனப்பான்மையுடன் செயற்படுவதன்மூலம் அவை எல்லாவற்றையும் சீர் செய்ய முடியும். சுட்டிக்காட்டுவதிலும் பார்க்க ஒட்டி நிரப்புவதே மேலானது. உறுப்பினர்கள் பொறுப்புக்கூறவேண்டியது தம்மைத் தெரிந்தெடுத்து அனுப்பிய மக்களுக்கேயன்றி வேறு எவர்க்குமல்ல.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பெருங்கடலில் சீனாவின் பெல்ட் அன்ட் றோட் உத்தி:

- ஈழத்து நிலவன்




உலக நாடுகள் அமெரிக்காவின் மேற்கு ஆசியத் தலையீடுகள், உக்ரைனில் நடைபெறும் போர் மற்றும் கிழக்கு ஆசியக் கிளர்ச்சிகளை கவனிக்கின்ற நிலையில், சீனா மெதுவாகவும் வியூகமாகவும் ஒரு பெரும் மாற்றத்தை இந்தியப் பெருங்கடலில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. பெல்ட் அண்ட் றோட் திட்டத்தின் ஊடாக, சீனா உலக வர்த்தக மற்றும் பாதுகாப்பு வழித்தடங்களில் தனது பாதிப்பை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் பொருளாதார மேம்பாட்டு முயற்சியாக தோன்றிய இது, தற்போது ஒரு வலிமையான புவியியல் சக்தியாக விரிவடைந்துள்ளது. இந்தியப் பெருங்கடல் இப்போது வெறும் கடல் வர்த்தக பாதையாக இல்லாமல், உலகச் சக்திகளுக்கிடையிலான புதிய கடற்படை போட்டியின் அரங்கமாக மாறியுள்ளது.

**பெல்ட் அண்ட் றோட் திட்டம்: உள்கட்டமைப்புக்கு அப்பாற்பட்டது**

2013இல் அறிமுகமான சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் திட்டம், உலகில் இதுவரை இல்லாத அளவிலான, சுமார் 1 டிரிலியன் டாலருக்கும் மேற்பட்ட முதலீடுகளை கொண்ட மிகப்பெரிய உளகட்டமைப்பு திட்டமாக மாறியுள்ளது. இந்தத் திட்டத்தின் “கடற்கரை சீல்க் பாதை” அம்சம், சீனாவின் நீண்டகாலக் கவலைகளை தீர்க்கும் முக்கிய வழியாக காணப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆழக் கடற்கரைப் பொது துறைமுகங்கள், தொழில் மண்டலங்கள், எண்ணெய் குழாய்கள், ஃபைபர் ஆப்டிக் கேபிள்கள் நுண் கம்பிகள், மற்றும் கடற்படை ஆதரவு வசதிகள் போன்றவற்றை உருவாக்குவதில் உள்ளது. இவை வெறும் வணிகத் திட்டங்கள் மட்டுமல்ல. இவை சீனாவின் செல்வாக்கு, அதிகாரம் மற்றும் இராணுவ பயன்பாட்டுக்கான கருவிகளாகும்.

# 2025இல் உலக சக்தியை மறுவடிவமைக்கும் கடல் அச்சு!

**இந்தியப் பெருங்கடல் ஏன் முக்கியமானது?**

இந்தியப் பெருங்கடல் வெறும் ஒரு கடல் பாதை அல்ல. இது ஆசியாவின் உயிர் நதி போன்றது. சீனாவின் எண்ணெய் இறக்குமதியின் 80 வீதத்துக்கும் மேற்பட்டவை இந்தக் கடல் வழியே, குறிப்பாக மலாக்கா சுரங்கச் சுரங்கத்தைக் கடந்து செல்லுகின்றன. எதிர்பார்க்கப்படும் எதிரிகள் - அமெரிக்கா, இந்தியா - உடன் ஒரு பெரிய மோதல் ஏற்பட்டால், இது சீனாவுக்கான மிகவும் எளிய தாக்க இடமாக மாறும்.

இதற்கான பதிலளிப்பாகவே, சீனா பல இடங்களில் துறைமுகங்கள் மற்றும் இடைவழி ஆதரவு முகாம்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இது “முத்துகளின் சங்கிலி” என அழைக்கப்படும் ஒரு வியூகக் கட்டமைப்பாக உருவெடுக்கிறது.

இந்தியப் பெருங்கடல் என்பது மத்திய கிழக்கு எண்ணெய் வளங்கள், கிழக்கு ஆப்பிரிக்காவின் வளமான கடலோரங்கள், மற்றும் தெற்காசிய தொழில்துறை மையங்களை இணைக் கும் ஒரு முக்கிய நீர்வழி. இந்தக் கடற் பாதையில் பல கட்டுப்பாடுகளை நிலை நாட்டுவதன் மூலம், சீனா வர்த்தக ஆதிக் கத்தை மட்டுமின்றி, அரசியல், கடற் படை, மற்றும் புவியியல் வலிமையை யும் கைக்கொள்ள விரைகிறது.



**சீனாவின் உத்தியில் முக்கியமான கடல் மையங்கள்**

சீனாவின் இந்தியப் பெருங்கடல் திட்டத்தில் பின்வரும் முக்கிய துறைமுகங்கள் மற்றும் அமைப்புகள் உள்ளன:

இலங்கையில், ஹம்பாந்தோட்டா துறைமுகம் சீனக் கடன்களை அடைக்க முடியாத சூழ்நிலையில் 99 ஆண்டுகளுக்குச் சீனாவிடம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. இது தற்போது இந்தியா மற்றும் அமெரிக்காவால் எச்சரிக்கையாக கண்காணிக்கப்படுகிறது, காரணம் - இது இருமுகமாக மாற்றப்படக்கூடியது.

பாகிஸ்தானில், குவாதர் துறைமுகத்தில், சீனா சுமார் டொலர் 60 பில்லியனுக்கும் மேற்பட்ட முதலீடுகள் செய்து, நேரடி அரபிக்கடல் அணுகலைப் பெற்றுள்ளது. 2025இல் வெளியான செயற்கைக்கோள் படங்கள், இங்கு பாதுகாப்பு வளாகங்கள், மற்றும் அடிநிலைத் திட்டங்கள் விரிவடையக்கூடியதைக் காட்டுகின்றன.

ஜிபூட்டியில், சீனாவின் முதல் வெளிநாட்டு இராணுவத் தளம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது அமெரிக்க, பிரெஞ்சு மற்றும் ஜப்பான் இராணுவ முகாம்களின் அருகில் உள்ளது. 2025இல் இருந்து தொடர்ந்து சீனக் கடற்படை கப்பல்கள் இங்கு வந்திறங்குகின்றன.

மேலும், மியான்மர், மாலைத்தீவுகள், தான்சானியா, கென்யா, இந்தியோனேஷியா ஆகிய நாடுகளிலும் சீனா துறைமுக முதலீடுகள் செய்கிறது.

**டிஜிட்டல் மற்றும் சைபர் பரிமாணம்**

2025இல், சீனாவின் இந்தியப் பெருங்கடல் லட்சியங்கள் கடலுக்கடியில் விரிவடைகின்றன - “டிஜிட்டல் பட்டுப் பாதை” மூலம். ஹூவாவேய் மெரைன் நெட்வொர்க்ஸ் போன்ற சீன நிறுவனங்களால் [illegible] நீரடி ஃபைபர் ஆப்டிக் கேபிள்கள், பல துறைமுகங்கள் மற்றும் கடற்கரை நகரங்களை இணைக்கின்றன.

பல இந்தியப் பெருங்கடல் நாடுகள் சீனாவின் 5ஜி உள்கட்டமைப்பு, கிளவுட் சேவைகள் மற்றும் மின்-ஆட்சி முறைகளை ஏற்றுள்ளன. இது அவர்களின் டிஜிட்டல் சூழலில் சீனாவை பதிக்கிறது.

**2025இல் ஏற்படும் புவியியல் அரசியல் தாக்கம்**

சீனாவின் இந்தியப் பெருங்கடல் விரிவாக்கம் ஒவ்வொரு பெரும் சக்தியின் மூலோபாயக் கணக்கீட்டையும் மாற்றியமைக்கிறது.

- இந்தியாவிற்கு, இது சுற்றி வளைக்கப்படுவதாக உணரப்படுகிறது.
- அமெரிக்காவிற்கு, இது ஒரு போட்டியாளரின் எழுச்சியாக உள்ளது.

இந்தியா, இதற்கு பதிலளிக்க, சாபஹார் (ஈரான்) துறைமுகத்தில் முதலீடு செய்து, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் இராணுவ உள்கட்டமைப்புகளை விரிவுபடுத்துகிறது. QUAD கட்டமைப்பின் கீழ் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் ஒத்துழைப்பை ஆழப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் கட்டளை, சீன துறைமுகங்கள் போர் நேரத்தில் இராணுவ தளங்களாக மாறக்கூடும் என்று எச்சரித்துள்ளது.

கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில், சீனாவின் துறைமுக நிதியுதவி அரசியல் செல்வாக்காக மாறியுள்ளது.

**பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் இராஜதந்திரம்**

இலங்கை, பாகிஸ்தான், கென்யா, மாலைத்தீவுகள் போன்ற நாடுகள் தற்போது கடன் நெருக்கடியில் உள்ளன. பாகிஸ்தான் 2024இல் சீனாவிடம் பகுதி கடன்கள் ரத்துசெய்ய வேண்டியுள்ளது. இலங்கை ஐஎம்எவ் உடன் கடன் ஒப்பந்தங்களைத் தொடர்ந்து பேசி வருகின்றது.

இதனை விமர்சகர்கள் “கடன் பிடி மூட்டு நயவஞ்சகம்” என கூறுகின்றனர். அதாவது, தேவையற்ற பெரிய திட்டங்களுக்கு கடன் வழங்கி, பின்னர் கட்ட முடியாத நிலையிலே முக்கியமான துறைமுகங்களை கைப்பற்றுதல் என்பது நிஜத்தில் நடந்துள்ளது. சீனா இதை மறுக்கிறது, ஆனால் அதன் புவியியல் விளைவுகள் நன்கு தெரிகின்றன.

**இந்தியப் பெருங்கடலின் எதிர்காலம்**

2025இல், இந்தியப் பெருங்கடல் வெறும் வர்த்தக தளமாக இல்லாமல், புதிய உலக அதிகார அமைப்புக்கான போட்டியின் முனையமாக மாறியுள்ளது. சீனா இப்போது தனது வியூகப் பாதிப்பை மட்டுமல்ல, அரசியல் மற்றும் இராணுவ மீள்தோன்றலாக மாற்றி வருகிறது.

பேசாமல், அமைதியாக, சீனா கான்கிரீட் கட்டுகிறது, ஒளிக்கம்பிகள் செலுத்துகிறது, கடற்படை தளங்களை நிறுவுகிறது. மேற்கு நாடுகள் சான்க்ஷன்கள், கூட்டணிகள் குறித்து விவாதிக்கின்றன் ஆனால், சீனா கடலோர நாடுகளின் உள்ளமைவையே மாற்றுகிறது.

ஹம்பாந்தோட்டா முதல் குவாதர் வரை, ஜிபூட்டி முதல் க்யாக்குப்யூ வரை, சீனா கட்டும் இந்தப் பெருங்கடல் கடைசியில் ஒரு புதிய மரிட்டைம் அச்சு ஆக மாறுகிறது. இது இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கையாளும் வலிமையை சவாலுக்கு உள்ளாக்குகிறது.

இந்தியப் பெருங்கடல் தொடர்பான சக்தி சமநிலையை தீர்மானிக்கும் இந்த வியூகப் போர், பசுமையாக இருக்கலாம் ஆனால் அதன் தாக்கங்கள், பசுமையில்லாத உலக அழுத்தங்களை உருவாக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா தடுக்க தவறிய ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலை :

## முப்பதாண்டின் பின்னரும் உறவுகளைத் தேடும் போஸ்னியர் !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

போஸ்னியப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த 1995 ஜூலை மாதம், கிழக்கு போஸ்னிய நகரமான ஸ்ரெப்ரெனிகாவில் (**Srebrenica**) அரங்கேறிய கொடூரமான இனப்படுகொலையானது, 1996இல் யாழ் செம்மணியில் நிகழ்ந்த புதைகுழி படுகொலையை நினைவூட்டுகின்றது.

போஸ்னியாவில் கொடூரமான ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையின் 30 வது ஆண்டு நினைவு தினத்தினை ஜூலை 11 அன்று அனுசரிக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11 அன்று இனப்படுகொலையை நினைவு கூறும் வண்ணம் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி நினைவு கூர்வது வழக்கம். இந்த ஆண்டு 30 வது ஆண்டு என்பதால் இந்த நினைவு தினத்தினை மிகப் பெரிய அளவில் அனுசரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

படுகொலையானவர்களின் ஸ்ரெப்ரெனிகா நினைவகம், அதிகாரப்பூர்வமாக 'பொட்டோச்சாரி ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலை நினைவு மைய கல்லறை' அங்கே பொது மக்களால் அமைக்கப்பட்டுள்ளது.

பால்கன் நாடுகளில் தீவிரமான போர் காலங்களில் இந்த கொடூரமான படுகொலை நிகழ்ந்தது. 1995 ஜூலையில் ஸ்ரெப்ரெனிகாவில் ஒரு வாரத்துக்குள் விசாரணை என்ற போர்வையில் அழைத்துச் சென்ற மொத்தம் எண்ணாயிரத்திற்கும் அதிகமான போஸ்னிய முஸ்லிம் ஆண்கள் மற்றும் சிறார்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.




சேர்பியப் படைகள் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை தனியே பிடித்து வைத்திருந்து இப்படுகொலைகளை மேற்கொண்டிருந்தது. இது இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு பின்பு ஐரோப்பிய நிலப்பரப்பில் நிகழ்ந்த மிகப்பெரிய இனப்படுகொலையாக சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

இதுவரையில் எண்பதுக்கும் மேற்பட்ட மனித புதைகுழிகளிலிருந்து 6900 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. போஸ்னிய இஸ்லாமியர்கள் மற்றும் குரோசிய இன மக்களுக்கு எதிராக சேர்பியர்களின் படை நடத்திய தாக்குதல்களில் 1992 க்கும் 1995 க்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை படுகொலை செய்யப்பட்டார்கள். இது இரண்டாம் உலகப் போருக்குப் பின்பான காலத்தில் நடந்த மிகப்பெரிய படுகொலையாக பார்க்கப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு யூகோஸ்லாவியக் குடியரசின் சோசலிச கூட்டமைப்பு என்பது 6 குடியரசுகளை உள்ளடக்கியதாக இருந்தது. அவை போஸ்னியா-ஹெர்சேகோவினா, குரோசியா, மாசிடோனியா, மாண்டிநீக்ரோ, சேர்பியா மற்றும் ஸ்லோவேனியா ஆகும்.

யூகோஸ்லாவியாவின் அதிபரும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான மார்ஷல் டிட்டோ 1980இல் இறந்த பிறகு அங்கு அரசியல் சிக்கல்கள், குழப்பங்கள் உருவாக ஆரம்பித்தன. இதனால் அடுத்து வந்த பத்தாண்டுகளில் 1991-ம் ஆண்டு யுகோஸ்லாவிய கூட்டமைப்பு பல்வேறு சிக்கல்களின் காரணமாக உடைவுறத் தொடங்கியது.

இதன் பின்னர் போஸ்னியாவின் விடுதலை அறிவிப்பை ஏற்காத போஸ்னிய சேர்பியாகள், 1992-ம் ஆண்டு போஸ்னியா-ஹெர்சேகோவினா குடியரசானது யுகோஸ்லாவிலிருந்து தனது விடுதலையினை அறிவித்தது. போஸ்னியா-ஹெர்சேகோவினா குடியரசில் போஸ்னிய இஸ்லாமியர்கள், போஸ்னிய சேர்பியாகள், குரோசி யர்கள் எனும் மூன்று இனங்களைச் சேர்ந்த மக்கள் வசித் தார்கள்.

அவர்களின் மக்கள் தொகையில் 44 சதவீதம் போஸ்னிய இஸ்லாமியர்களும், 31 சதவீதம் சேர்பியர்களும், 17 சதவீதம் குரோசியர்களும் இருந்தனர். இஸ்லாமியர்கள் பெரும்பான்மையினராக இருந்ததாலும், இஸ்லாமிய கட்சி ஆட்சியில் இருந்ததாலும், அங்கு வசித்த சேர்பியர்கள் இந்த விடுதலை அறிவிப்பினை ஏற்கவில்லை.

அவர்கள் யூகோஸ்லாவியாவுடன் சேர்ந்திருக்கவோ அல்லது சேர்பியாவுடன் இணைந்து கொள்ளவோ விரும்பினார்கள். அப்போது அங்கு வளர்ந்திருந்த இனவாத சக்திகள் போஸ்னியாவின் சேர்பிய மக்களை, போஸ்னிய இஸ்லாமியர்களுக்கு எதிராகவும், குரோசியர்களுக்கு எதிராகவும் தூண்டிவிட்டன.

போஸ்னியாவின் சேர்பிய கட்சியின் தலைவர் ரேடோவான் கராட்சிக் என்பவர் சேர்பியர்களுக்கான தனி 'சேர்பிய தேசிய அவையை' உருவாக்கினார். சேர்பியர்களின் படையும் தனியே உருவாக்கப்பட்டு இருந்தது. அதே வேளை 1992 மே மாதம் ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய யூனியனும் போஸ்னியாவின் விடுதலையை அங்கீகரித்தன.

இதன் பின்னர் போஸ்னியாவில் இருந்த சேர்பியர்களின் படை, யூகோஸ்லாவிய ராணுவத்துடன் சேர்ந்து கொண்டு போஸ்னியாவின் தலைநகரத்தை தாக்கியது.

கிழக்கு போஸ்னியாவில் இருந்த இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளையும் தாக்கினார்கள். போஸ்னியாவின் பல பகுதிகளை சேர்பியர்களின் படை கைப்பற்றியது. இதற்கிடையில் இஸ்லாமியர்கள் மிகப் பெரிய அளவில் படுகொலை செய்யப்பட்டார்கள். சொத்துகள் சூறையாடப்பட்டன. அரசியல் தலைவர்களும், அறிவுஜீவிகளும் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். ஏராளமான குரோசியர்களும், போஸ்னிய இஸ்லாமியர்களும் நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்தார்கள்.





**போஸ்னியாவில் கொடூரமான 1995 ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையின் 30 வது ஆண்டு நினைவு தினம் ஜூலை 11இல் உலகெங்கும் நினைவு கூறப்படுகிறது.**



1995ம் ஆண்டு ஸ்ரெப்ரெனிகா, செபா, கொராஸ்டெ ஆகிய மூன்று நகரங்கள் போஸ்னிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. இப்பகுதியில் அகதிகள் ஏராளம் இருந்ததால் இதனை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்து, ஐ.நாவின் அமைதிகாப்புப் படை அங்கிருந்தது. அங்கு 50,000 பொதுமக்கள் அகதிகளாக இருந்தார்கள்.

ஜூலை 11, 1995 அன்று ராட்கோ மிளாடிக் எனும் தளபதியின் உத்தரவுப்படி சேர்பியர்களின் படை ஸ்ரெப்ரெனிகா பகுதிக்குள் நுழைந்தது. போஸ்னிய இஸ்லாமியர்களை படுகொலை செய்யத் தொடங்கியது. சிறுவர்கள், இளைஞர்கள் என அனைவரும் கண்மூடித்தனமாக கொல்லப்பட்டனர். பெண்கள் பலர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

ஏராளமான போஸ்னிய இளைஞர்களை அவர்களின் மரணத்திற்கு முன்பு அவர்களையே குழிவெட்ட சொல்லி, அக்குழியில் அவர்களை சுட்டுத் தள்ளியது சேர்பியாகளின் படை. இந்நிகழ்வில் 8000 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டு வார கால இடைவெளிக்குள் இந்த படுகொலைகள் நடைபெற்றன.



கோரமான ஸ்ரெப்ரெனிகா படுகொலையானது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகத்தின் இயலாமையை அப்பட்டமாக வெளிக்காட்டியது. போரின் போது 'பாதுகாப்பான பகுதி" என அறிவிக்கப்பட்ட ஒரு பிராந்தியத்தில், ஐ.நா. அமைதிப்படையினரின் பிரசன் னத்தையும் மீறி சேர்பியப் படைகளால் இந்த இனப்படு கொலை நிகழ்த்தப்பட்டது. இக்கொடூரச் செயல் உலக அளவில் பேரதிர்ச்சியையும் கடும் கண்டனங்களையும் ஏற்படுத்தியது.

இந்த இனப்படுகொலையின் போது, பெண்களும் குழந்தைகளும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். பெண்கள் மற்றும் சிறுமிகள், சேர்பியப் படையினரால் பாலியல் வன்கொடுமைகளுக்கும் கொடிய சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர் என்பதற்கும் வலுவான சாட்சியங்கள் உள்ளன.

இந்தத் துயரத்தின் விளைவாக, 'ஸ்ரெப்ரெனிகா தாய்மார் அமைப்பு' உள்ளிட்ட பல பெண்கள் உரிமை அமைப்புகள் உருவாகின. இந்த அமைப்புகள், காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல்களைக் கண்டறிந்து நீதியைப் பெறுவதற்காக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய நீதிமன்றங்களில் தொடர்ந்து முறையிட்டனர்.

ஸ்ரெப்ரெனிகா உட்பட போஸ்னியா முழுவதும் பல புதைகுழிகளில் உடற்கூறுகள் இன்னும் கிடைக்கின்றன. பல குடும்பங்கள் தமது உறவுகளின் உடல்களைத் தேடி அலைவதும், கிடைத்தவைகளை னுயே மரபணு மூலம் அடையாளம் காண்பதும் தொடர்ந்து நடைபெறுகின் றன.

1996 ஆம் ஆண்டு முதல், புதிதாகக் கண்டெடுக்கப்படும் உடற்கூறுகள், டிஎன்ஏ பரிசோதனையின் மூலம் அடையாளம் உறுதிசெய்யப்பட்ட பின்னர், ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 11 அன்று நடைபெறும் நினைவு தினத்தில், ஸ்ரெப்ரெனிகா-போட்டோசாரி நினைவிடத்தில் மிகுந்த மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுகின்றன.

2020-ஆம் ஆண்டின் நிலவரப்படி, படுகொலை செய்யப்பட்டவர்களில் சுமார் 6,993 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருப்பினும், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இன்னும் காணாமல் போனோர் பட்டியலில் இருப்பது வேதனைக்குரியது.

கொடூரமான இந்தப் இனப்படுகொலை ஏற்படுத்திய உளவியல் வடுக்கள், பல பெண்களின் வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றிவிட்டன. ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் கணவர்களையும் மகன்களையும் இழந்து விதவைகள் ஆனார்கள்.

அத்துடன் அவர்களின் குழந்தைகள் தந்தையற்றோராய் நின்றனர். இத்தகைய துயர நிலையிலும் துவண்டு விடாமல், இந்தப் பெண்கள் நீதிக்காக நடத்திய போராட்டம், உலகிற்கே ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது.

ஸ்ரெப்ரெனிகா அன்னையர் என்ற அமைப்பு, இனப்படுகொலையின் போது ஐ.நா. அமைதிப்படையின் கீழ் செயல்பட்ட நெதர்லாந்துப் படையினரும், ஐ.நா.வும் தங்களது கடமைகளைச் செய்யத் தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டி, 2000இல் சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு உள்ள முழுமையான சட்டப் பாதுகாப்புரிமை காரணமாக, அதன் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும், நெதர்லாந்து அரசுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், 2011இல் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. இந்தத் தீர்ப்பின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நெதர்லாந்து அரசு உரிய நட்டஈட்டை வழங்க வேண்டுமென அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்த பின்னரும், நீதியையும் உண்மையையும் நிலைநாட்டியிருக்கின்றனர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி முகத்திடலில் பதற்றநிலை

கொழும்பு, ஜூலை 06

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள அங்கீகரிக்கப்படாத விற்பனை நிலையங்களை அகற்றுவதற்காக நேற்று முன்தினம் மதியம் துறைமுக அபிவிருத்தி ஆலோசனை சேவைகள் தனியார் நிறுவனத்தின் அதிகாரிகள் சென்ற போது பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதியுடன் பாதுகாப்பான முறையில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில், காலி முகத்திடலில் வர்த்தகர்கள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பதற்றம் உருவாகியது.

இருப்பினும், நீண்ட காலமாக அப்பகுதியில் வணிகத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

துறைமுக அபிவிருத்தி ஆலோசனை சேவைகள் தனியார் நிறுவனத்தின் அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளுடன் அந்த இடத்துக்கு வந்தனர். அவர்கள், வர்த்தகர்கள் நீண்ட காலமாக இந்த இடத்தில் வணிகம் செய்து வருவதாகவும், ஆனால் பொது சுகாதாரப் பரிசோதகர்களிடமிருந்து உரிய சான்றிதழ்களைப் பெற வேண்டியிருப்பதாகவும் கூறி, அவர்களை அகற்றுவதற்குத் தயாராகி வருவதாகத் தெரிவித்தனர்.

எனினும், ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, துறைமுக அபிவிருத்தி ஆலோசனை சேவைகள் தனியார் நிறுவனத்தின் அதிகாரிகள் அவர்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை வரை வணிகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவித்தனர். (எ)

# 2027 ரக்பி உலகக் கிண்ண வாய்ப்பை இழந்த இலங்கை

கொழும்பு, ஜூலை 06

2027 ரக்பி உலகக் கிண்ண வாய்ப்பை இலங்கை அணி இழந்தது.

கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசிய ரக்பி ஆண்கள் சம்பியன்ஷிப் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியிடம் இலங்கை தேசிய ரக்பி அணி 21-29 என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

இதனால், 2027 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரக்பி உலகக் கிண்ணத்துக்கு, ஆசியப் பிரிவிலிருந்து நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பை இலங்கை அணி தவறவிட்டது.

தொடர்ந்து மூன்றாவது தோல்வியால் இலங்கை அணி சம்பியன்ஷிப் பட்டியலில் கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டது. தற்போது முதல் தரவரிசையில் இருந்து வெளியேற்றப்படும் அபாயத்தில் உள்ளது. (எ)

# உள்ளூராட்சி மன்றங்களின்...

சபை உறுப்பினர்கள் அனைவரும் உள்ளூராட்சி மன்றச் சட்டங்கள், நடை முறைகள் தொடர்பாக கற்றறிதல் மிக அவசியம். தம்மைச் சுற்றி நாளாந்தம் தேசிய, சர்வதேச அளவில் என்ன நடக் கிறது என்ற விழிப்புணர்வு ஒவ்வொருவருக் கும் இன்றியமையாதது. இளம் உறுப்பினர்கள் தமது தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்ய முனையவேண்டும். சபை நாகரீகம் பேணப்படவேண்டும். சபைக ளில் உறுப்பினர்களின் பண்பற்ற செயற்பாடுகளை ஊடகங்களில் பார்க்கும் இளஞ்சிறார்கள், அதில் உறுப்பினர்களின் பிள்ளையும் இருக்கும் எதனை மனங்கொள் வார்கள் என்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டும், எதை, எப்படி எடுத்துச் சொல்வது என்ற நுட்பமும் இங்கிதமும் வளர்க்கப்படவேண்டும். மக்களின் பிரதிநிதிகள் தமது மக்களைப் பெருமைகொள்ளச் செய்ய வேண்டுமேயன்றி அவர்களை முகஞ்சுழிக்க வைக்கக் கூடாது. இதற்கு கட்சி ரீதியாகவும் திணைக்கள ரீதியாகவும் இளம் உறுப்பினர்களுக்கு பயிலரங்குகள் மிகஅவசியமானவை. தவிசாளர்கள் தாம் மட்டும் நேர்மையாக இருந்தால் போதாது. மன்ற நிர்வாகமும் நேர்மையாக நடக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். நிர்மாணப் பகுதி, கேள்விகோ ரல், அனுமதிகள் போன்ற பிரிவுகளில் முறைகேடுகள் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். பணியாளர்களின் நேரமையீ னங்களும் தவிசாளர் மீதும் சபையின் மீதும் வந்துவிழும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியம். எல்லாவற்றுக் கும் மலாக சபையை சரியான திசையில் வழிநடத்தவேண்டியது செலாளர்களின் பொறுப்பும் கடமையாகும்.

# ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது

மஹியங்கனை, ஜூலை 06

ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மஹியங்கனை பூஜா நகர் பகுதியில் வைத்து சந்தேக நபரை சோதனைக்கு உட்படுத்திய போது சந்தேக நபரிடம் இருந்து 2510 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# மறைந்து ஒரு வருடத்திற்குள்ளாகவே...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சனங்களை முன்வைத்தன. ஆனால், அத்தகைய உறவை அவர் கொண்டிருந்தாலும், தமிழர் பிரச்சினையில் சிங்கள தலைவர்களின் தவறுகளை நேரடியாகவே சுட்டிக்காட்டும் துணிச்சல் அவரிடம் இருந்தது.

சம்பந்தன் இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த இரண்டாவது தமிழ் அரசியல் தலைவராவார். முதலில் அமிர்தலிங்கம் 1977 ஜூலை தொடக்கம் 1983 ஜூலை வரையும் பிறகு சம்பந்தன் 2015 டெப்டெம்பர் தொடக்கம் 2019 அக்டோபர் வரையும் அந்த பதவியை வகித்தனர். அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த காலப்பகுதிக்கு பிறகு உள்நாட்டுப்போர் மூண்ட அதேவேளை, போர் முடிவுக்கு வந்ததன் பின்னரான காலப்பகுதியில் சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு வந்தார். தமிழ் ஆயுதப்போராட்ட இயக்கங்கள் வளர்ந்து கொண்டிருந்த நாட்களில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்ததும் ஆயுதப்போராட்ட இயக்கங்கள் செயலிழந்த பிறகு அந்த பதவியை சம்பந்தன் வகித்ததும் இருவருக்கும் இடையிலான வேறுபாடா கும்.

ஒரு எதிர்க்கட்சி தலைவராக இல்லாமல் சிறிசேன - ரணில் அரசாங்கத்தை ஆதரித்த ஒருவராகவே சம்பந்தன் நடந்து கொண்டார் என்ற விமர்சனங்கள் எழுந்தன. அந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பை வரையும் செயன்முறையை முன்னெடுத்த காரணத்தால் அதற்கு ஒத்துழைத்து இனப்பிரச்சினைக்கு உருப்படியான அதிகாரப் பரவலாக்கம் மூலமாக அரசியல் தீர்வொன்றை காணும் நம்பிக்கையில் அவர் அவ்வாறு நடந்து கொண்டிருக்கக் கூடும். ஆனால், அவருக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. அவரது தலைமைத்துவம் நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு சிங்கள தலைவர்களுக்கு சிறந்த வாய்ப்பை வழங்கியது என்று நம்பியவர்கள் பலர். ஆனால், முன்னைய தமிழ் தலைவர்களுக்கு கிடைத்த கவலைக்குரிய அனுபவமே சம்பந்தனுக்கும் கிடைத்தது.

எது எவ்வாறிருந்தாலும், சம்பந்தனின் மறைவு தமிழர் அரசியலில் ஏற்படுத்திய வெற்றிடம் அண்மைய எதிர்காலத்தில் நிரப்பப்படக்கூடிய வாய்ப்பு தொடர்பில் நம்பிக்கை வைப்பதற்குரிய அரசியல் சூழ்நிலை தமிழர்கள் மத்தியில் இன்று இல்லை. தமிழ் மக்களின் நலன்களில் அன்றி தங்களது கட்சி அரசியல் நலன்களிலும் ஆளுமைப் போட்டியிலும் அக்கறை காட்டுவதற்கே இன்றைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு நேரம் போதாமல் இருக்கிறது.

கற்பனை செய்து பார்த்திருக்க முடியாத தியாகங்கள் நிறைந்த மூன்று தசாப்தகால போராட்டத்தைக் கடந்து வந்ததற்கான எந்தவிதமான குணாதிசயத்தையும் கொண்டிராதவர்களாக இன்றைய இலங்கை தமிழ்ச் சமூகத்தின் கணிசமான பிரிவினர் காணப்படுகிறார்கள். புத்திபேதலித்தவர்கள் என்று அடையாளம் காணப்படுகின்ற சில அரசியல்வாதிகள் தான்தோன்றித்தனமாக பேசுவதையும் செய்வதையும் கூட நியாயப்படுத்துகின்ற அளவுக்கு அவர்கள் நிலைமை புரியாதவர்களாக இருக்கிறார்கள்.

அதேவேளை, தமிழ்ச் சமூகத்துக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு ஆசைப்படுகிறவர்களில் பலரும் கூட வாழும் முறையால் வழிகாட்டுவதற்கான எந்த தகுதியையும் கொண்டவர்களாகவோ, மக்களின் சமகால தேவைகளைப் புரிந்து கொள்பவர்களாகவோ, இன்றைய சர்வதேச நிலைவரங்களை புரிந்துகொண்டு பேசக் கூடியவர்களாகவோ இல்லை. தமிழர் அரசியல் இன்று முன்னென்றும் இல்லாத வகையில் ஊழல்மயப்பட்டதாகவும் இருக்கிறது.

நாட்டில் வாழும் தமிழர்களின் நலன்களை அன்றி புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சில சக்திகளின் நலன்களை அல்லது தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுகின்றவர்களாகவே இன்றைய எமது தமிழ் அரசியல்வாதிகளில் கணிசமானவர்களை காணக் கூடியதாக இருக்கிறது. வழி தெரியாததாக நிற்கும் இனறைய தமிழச் சமூகத்தை தங்களது நலன்களுக்கு வசதியான முறையில் பயன்படுத்துவதில் மாத்திரம் அக்கறை கொண்டவர்களாக பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

சர்வதேச ரீதியில் மதிக்கப்பட்ட பல தலைவர்களை ஒரு காலத்தில் கொண்டிருந்த இலங்கை தமிழச் சமுதாயம் இன்று உள்நாட்டிலேயே உருப்படியாக மதிக்கப்படக்கூடிய ஒரு அரசியல் தலைவர் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

# சர்வதேச ஆதரவுடன்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னால் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படக் கூடியது என்று எதை அரசாங்கம் உணருகிறதோ அதை மாத்திரமே செய்வதில் நாட்டம் காட்டுவது முக்கிரமானதாகும். அரசியல் விருப்பமோ அல்லது துணிவாற்றலோ இல்லாமல் வெறுமனே சட்டச் செயன்முறையினால் பொறுப்புக்கூறல் விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று நம்பிக்கை வைக்கக்கூடாது என்று நிலைமாறுகால நீதிச் செயன்முறைகள் தொடர்பில் நிபுணத்துவம் கொண்ட கல்விமான்கள் எச்சரிக்கிறார்கள்.

பிரதானமாக வெளிநாட்டில் இருந்து பொறுப்புக் கூறலுக்கான தூண்டுதல் வரும்போது அது இறுதியில் சீர்திருத்தத்தை பலவீனப்படுத்தக்கூடிய தேசியவாத எதிர்ப்பை மூளவைக்கும் என்றும் அறிஞர்கள் எச்சரிக்கிறார்கள். கொலம்பியாவின் சமாதானச் செயன்முறையில் சர்வதேச ஆலோசகர்கள் செயல்நுட்ப கமிட்டிகளில் அங்கம் வகித்தார்கள், ஆனால் தீர்ப்புக்களை கொலம்பியர்களே எழுதினார்கள். இந்த ஏற்பாடு உள்நாட்டுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த காரணத்தினால் பல அரசாங்கங்கள் மாறிமாறி அதிகாரத்துக்கு வந்தபோதிலும், மாற்றமடையாமல் தாக்குப்பிடிக்கிறது.

சர்வதேச சமூகம் அதன் ஆலோசனையையும் நிபுணத்துவத்தையும் வழங்கலாம், ஆனால் தீர்மானங்கள் இலங்கையர்களினால் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதை சர்வதேச புகழ்பெற்ற சமாதான கல்விமான் ஜோன் போல் லிடறாக் 'அனுபவங்களில் இருந்து படிப்பினைகளை பெற்று கடைப்பிடிக்கும் அணுகுமுறை' என்று அழைக்கிறார். வெளியார் சம்பாஷணைகளுக்கு அனுசரணை வழங்கலாம், ஆனால், பிரச்சினைகளின் தீர்வுக்கான பதிலின் உரைநடை உள்நாட்டு பண்புகளின் அடிப்படையில் அமைய வேண்டும். சிவில் சமூகத்தின் வகுக்கப்படுகின்ற சமாதான இணக்கத் தீர்வுகள் நின்று பிடிக்கக்கூடியவை.

இலங்கை தொடர்பில் எதிர்வரும் செப்டெம்பரில் புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதா இல்லையா என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானிக்கவிருக்கும் நிலையில், தாகூரின் வார்த்தைகள் மெய்ப்படுவதற்கு அரசாங்கத்தை பொறுத்தவரை ஒரு குறுகிய ஜன்னலே இருக்கிறது. 'எங்கெல்லாம் உண்மையின் ஆழத்தில் இருந்து வார்த்தைகள் வருகின்றனவோ, எங்கெல்லாம் தளராத முயற்சிகள் செம்மையை நோக்கி முன்னெடுக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் நியாயத்தின் தெளிவான போக்கு அதன் பாதையைத் தவறவிடுவதில்லை.'

எதிரணியையும் சிவில் சமூகத்தையும் உள்ளடக்கியதாக நல்லிணக்கம் தொடர்பான தேசிய பேச்சுவார்த்தைக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலம் அரசாங்கம் வெளி நெருக்குதலை உள்நாட்டு உத்வேகமாக மாற்றமுடியும் என்பதுடன் பக்கச்சார்பான கட்சி அரசியலுக்கு அப்பால் நிலைபேறான கருத்தொருமிப்பு இணக்கத்தீர்வை வரைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

நிதி குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு உள்ளிட்ட பல முக்கிய பிரிவுகளில் மூடப்பட்ட கோப்புகளை மீண்டும் திறக்க குற்றப் புலனாய்வுத்துறை முடிவு செய்துள்ளது.

ஆலோசனை தேவைப்படும் விடயங்கள் குறித்தும், கைதுகள் குறித்தும் சட்டமா அதிபரிடம் விசாரித்து ஆலோசனை பெற முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்து ஆராயுமாறு பொது பாதுகாப்பு அமைச்சர், காவல துறைக்கு அறிவித்துள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மூக்கிய...

பெறப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விசாரணைகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் மூத்த அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## சித்துப்பாத்தி...

காணப்பட்டுள்ளன.

சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையா ளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பானஇரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் பத்தாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது மூன்று என்புத் தொகுதிகள் புதிதாக அடையா ளம் காணப்பட்டுள்ளன.

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை 45 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது வரை 42 என்புத் தொகுதிகள் முழுமை யாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா வின் கண்காணிப்பில் துறைசார் நிபு ணரும் பேராசிரியருமான சோமதேவா வின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்கள் சார்பான சட்டத்தரணிகளான வி.கே.நிரஞ்சன், ஞா.ரனித்தா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவின ரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னி லையாகி வருகின்றனர்.

மேலும் நேற்றைய அகழ்வுப்பணி களின்போது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் தொல்லி யல் துறை விரிவுரையாளர்கள் வருகை தந்து அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்களை அவதானித்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாண...

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி அதிகரித்துள் ளது. ஏனைய எதிர்க்கட்சி களின் வாக்கு வங்கியும் அதிகரித்திருப் பதை காணமுடி கின்றது.

அடுத்து மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எனினும், தற்போதைய சூழ்நிலையில் அத்தேர் தலை அரசாங்கம் நடத்துமா என தெரிய வில்லை. அவ்வாறு நடத்தப்பட்டால் அனைத்து சபைகளையும் எதிரணிகளே கைப்பற்றும்.

அதேவேளை, இந்த அரசாங்கம் ஐந்து வருடங்கள் பயணிக்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது, மக்கள் ஆணைக்கு முரணாக அரசாங்கம் செயற்பட்டால் போராட்டங்களில் ஈடுபட்டு, அரசாங் கத்தின் ஆயுட்காலத்தை சுருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

## அரியாலை...

புதைகுழிக்கு அருகில் மேலும் புதை குழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத் தின் அடிப்படையில் அடையாளப்படுத் தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்து.

அந்தப் பகுதிகளில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்க லைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகின.

இந்நிலையில் நேற்றைய அகழ்வின் போது அந்தப் பகுதியில் சிறுமியின் ஆடை ஒன்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது. நேற்றைய அகழ் வில் மண்டையோடு ஒன்று அடையா ளம் காணப்பட்டது. அதனை அகழ்ந்து எடுப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

## செம்மணி...

தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசு கடந்த காலத்தில் விசாரணைகளை நிறுத்தி, புதைகுழிகள் இருப்பதை மறுத்திருந்தாலும், அந்த புதைகுழிகளுக்கு அண்மையில் புதிய புதைகுழிகள் இருப்பதை செயற்கைக் கோள் படங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இலங்கையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போயுள்ள நிலையில், மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் தலைமை யிலான விசாரணையைக் கோருகின்றன.

எனவே, இனப்படுகொலை குற்ற வாளிகளால் தங்கள் சொந்த குற்றங்களை விசாரிக்க முடியாது எனவும், சர்வதேச தலையீடு அவசியமானது மட்டுமல்ல அவசரமானது எனவும் கனடாவின் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் விஜய் தணிகாசலம் வலியுறுத்தியுள்ளார். (அ)

## 300,000...

குருநாகல், மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதி களிலும் புதிய மையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளதாக தேசிய அபாயகர ஔட தங் கள் கட்டுப்பாட்டு சபையின் பணிப் பாளர் நாயகம் சுஜித் கொத்தலாவல தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக வும் 250 மில்லியன் ரூபா நிதி இந்த வேலைத்திட்டத்துக்காக பெறப்பட்டுள் ளதாக அவர் தெரிவித்தார். (அ)

## அமைச்சர்...

தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுகத்தில் இருந்து பரிசோத னையின்றி 323 கொள்கலன்கள் விடுவிக் கப்பட்டுள்ளன.

அவற்றில் ஆயுதங்களே வந்தன என்று பாராளுமன்ற உறுப்பினர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் எடுக்கப்பட்ட நட வடிக்கை என்ன?

கொள்கலன் விவகாரம் தொடர்பில் விசாரணைக்கு குழுவொன்று நியமிக் கப்பட்டது.

விசாரணையின்றி அவை விடுவிக்கப் பட்டமை தவறு என அந்த குழு கண் டறிந்துள்ளது.

323 கொள்கலன்களில் என்ன இருந் தன என்பதை துறைக்கு பொறுப்பான அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல அமைச்சர் பிமல் ரத்நாயக்க அல்லது பிரதி அமைச்சர் பதவி விலக வேண்டும்-என்றார். (அ)

# சண்முகதாசன் நினைவு பேருரையும் நூல் வெளியீடும்


கொழும்பு, ஜூலை 06

இலங்கை புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடி தலைவரான என்.சண்முகதாசனின் 105 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நினைவுப் பேரு ரையும் நூல் வெளியீடும் இன்று ஞாயிற் றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறுகிறது.

பேராசிரியர் சி.மௌனகுரு தலை மையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவி யல்துறை விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் " கொந்தளிப்பான சர்வதேச நிலைவரமும் இலங்கைக்கான மார்க்கமும் " எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

எழுத்தாளர் வி.ரி. இளங்கோவன் நூல் அறிமுகவுரையை நிகழ்த்துவார். கம்யூனிஸ்ட் இயக்க செயற்பாட்டாள ரான எம்.ஏ.சி. இக்பால் நூலை வெளி யிட்டு வைப்பார்.

சண்முகதாசனின் நூற்றாண்டை முன்னிட்டு 2020 ஜூலையில் அரசியல் ஆய்வாளர்கள், இராஜதந்திரிகள், கல்வி மான்கள், பத்திரிகையாளர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலான "




"சண்முகதாசன் நூற்றாண்டு மனப் பதிவுகள்" (தமிழிலும் ஆங்கிலத்திலும்) வெளியிட்டு வைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வை மார்க்சிய கற்கை களுக்கான சண்முகதாசன் நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது. (அ)

## செம்மணி சாட்சியங்களை...

விதிக்கப்பட்டார், மேலும் அவரைத் தேடி வந்த நான்கு பேரின் கொலைக ளும் இதில் அடங்கும். தனது விசார ணையின்போது, செம்மணிக்கு அருகி லுள்ள ஒரு கூட்டுப் புதைகுழியில் சுமார் நானூறு பாதிக்கப்பட்டவர்களை அடக் கம் செய்ததில் தனக்கு தொடர்பு இருப்ப தாக ராஜபக்ஷ வெளிப்படுத்தினார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செம்மணிப் புதைகுழி தோண்டியலின் இரண்டாம் கட்டத்தின் 6 ஆவது நாளின்போது, குழந்தைகளின் எலும்புக் கூடுகள் உட்பட மேலும் பல எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்று தெளிவாக புதைக்கப்பட்டிருந்த ஒரு தனித்துவமான நீல நிறப் பள்ளிப் பையு டன் இருந்தது, இது யுனிசெப் விநியோ கித்த வகையானது மற்றும் ஒரு பொம்மை.

இதுவரை, அகழ்வாராய்ச்சியில் 33 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. இருப்பினும், இவை அனைத்தும் எடுக்கப்பட்டு அரசு நீதித்துறை மருத் துவ அதிகாரியின் பாதுகாப்பில் வைக் கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, மனித உரிமை ஆர்வலர்கள் சாட்சியங்களை சிதைத்து இந்த எலும்புக்கூடுகள் அழிக்கப்படுவ தற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, அகழ்வாராய்ச்சியிலிருந்து ஆய்வகம் வரை எச்சங்களை யார் கையாண்டார்கள் என்பதற்கான தெளி வான ஆவணங்கள் அவசியம் என்பதால், காவல் சங்கிலியில் உடனடியாக கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம். இல்லையெனில், தடயவியல் முடிவுகள் சட்டபூர்வமாக பலவீனமடையும்.

சர்வதேச மேற்பார்வையின் கீழ் தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளைப் பாதுகாக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும். இலங்கை அரசு அல்ல, சுயாதீன தடய வியல் குழுக்கள் அல்லது சர்வதேச நிபு ணர்கள் ஆதார சேகரிப்பு மற்றும் பகுப் பாய்வைக் கையாள வேண்டும்.

2021 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப் பட்ட ஐ.நா. தீர்மானம் 46/1 இன் படி, இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங் கள் தொடர்பான தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரித்து, ஒருங்கி ணைத்து, பகுப்பாய்வு செய்து, பாது காக்கும் அதிகாரம் சர்வதேச சமூகத் திற்கு உள்ளது. ஐ.நா. தான் கொண் டுள்ள ஆணையை நிறைவேற்ற வேண் டிய நேரம் இது.

1998 ஆம் ஆண்டு ராஜபக்ஷவின் சாட்சியம் பல செய்தி நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் அரசு சாரா நிறுவனங்களால் வெளியிடப்பட்டதி லிருந்து, செம்மணியில் ஒரு பெரிய புதைகுழி இருப்பதை உலகம் அறிந்தி ருக்கிறது. ஆனாலும், இப்போதுதான் அது தோண்டப்படுகிறது. இப்போதும் கூட, சான்றுகள் அழிக்கப்படும் அபா யம் உள்ளது.

ஐ.நா.வின் செயலற்ற தன்மையின் காரணமாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. இன்று, இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம், கல்லறைத் தளத்திலிருந்து சேகரிக்கப் பட்ட அனைத்து ஆதாரங்களும் முறை யாக சேகரிக்கப்பட்டு, ஒருங்கிணைக் கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, 46/1 தீர்மானத்தின் ஆணைக்குள் பாது காக்கப்படுவதை உறுதி செய்யவேண் டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானம் 46/1 இன் இணை அனுசர ணையாளராகவும், இலங்கையில் நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கு வரலாற்றுப் பொறுப்பைக் கொண்ட நாடாகவும், ஐக்கிய இராச்சியம் இந்தப் பிரச்னையில் முன்னிலை வகிக்க வேண்டும்.

செம்மணி படுகொலை மற்றும் அதைப் போன்ற குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, விசாரிக் கப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்படு வதை உறுதி செய்ய, இப்போது ஒரு சர்வதேச விசாரணை தொடங்கப்பட வேண்டும். இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் உள்ளபடி, இது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும்.

தமிழ் மக்கள் அமைதியாக இருக்கக் கூடாது. நீதிக்கான ஒவ்வொரு வழியும் நிறைவேறும் வரை அவர்கள் ஓய்வெடுக் கக்கூடாது-என்றார். (அ)

## சிறைச்சாலை...

சட்டத்தின் பெயரில் சிறையிலடைக் கப்பட்டனர்.

அவர்களில் பலர், சிறைச்சாலைக ளிலேயே கொல்லப்பட்டதுடன், மேலும் சிலர் இன்று வரையில் விடுதலை செய்யப்படாமல் உள்ளனர்.

எனவே, இந்த நினைவேந்தல் நிகழ்வின் ஊடாக, சிறைச்சாலைகளில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் அதேநேரம், இன்று வரை சிறையிலே வாடும் உறவுகளின் விடுதலையை வலி யுறுத்த உள்ளதாகக் குரலற்றவர் களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# நாணய நிதியத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டது அநுர அரசு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 06

**"சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மறுசீரமைக்கப்படும் என உறுதியளித்திருந்த ஜனாதிபதி, அந்த உறுதிமொழியை நிறை வேற்றாது நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றி வருகின்றார்."-என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

'சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் அரசு செய்துகொண்ட ஒப்பந்தம் நாட்டுக்கு ஏற்புடையது அல்லவெனவும், தாம் ஆட்சிக்கு வந்த பிறகு புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார்.

எனினும், தற்போது ஒப்பந்தத்தை மாற்ற முடியாது , அவ்வாறு செய்தால் அது பிரச்னைக்கு வழி வகுக்கும் எனவும், நடைமுறையில் இருந்த ஒப்பந்தமே முன்னெடுத்து செல்லப்படும் எனவும் ஜனாதிபதி கூறிவருகின்றார்."-எனவும் எதிர்க் கட்சி தலைவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படாததால் 4 ஆம் கட்ட கடன் தவணை இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அது விடுவிக்கப் பட்டுள்ளது. திடீரென இது எப்படி சாத்தியமானது? எரிபொருள் விலையேற்றம், மின் கட்டணம் அதிகரிப்பு போன்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் கடன் கிடைக்கப் பெற்றுள்ளது."-எனவும் சஜித் மேலும் கூறினார்.

(அ)

# சர்வதேசத்தின் தலையீடு எமக்குத் தேவையில்லை!

## கூறுகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஜுலை 06

இலங்கைக்கு சர்வதேச தலையீடு அவசியமில்லை எனவும் இலங்கையின் அரசமைப்பு, சட்டம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பு ஊடாகவே நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் செப்ரெம்பரில் நடைபெறவுள்ளது. எனவே, மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்தது நல்லது. அவருக்கும் அறிக்கை முன்வைப்பதற்கு அது இலகுவானதாக இருக்கும். ஏனெனில் அவரால் விடயங்களை நேரில் அவதானிக்க முடிந்தது. நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திக்காட்டியுள்ளோம்." - எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார பாகுபாட்டை நிவர்த்தி செய்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அவற்றையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு காணமுடிந்தது. நாம் எதையும் ஒளிக்கவில்லை. வெளிப்படைத் தன்மையுடன்தான் நடவடிக்கை இடம்பெறும்.

செப்ரெம்பர் முதல் வாரமளவில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது பற்றிய வர்த்தமானியை வெளியிடுவதே அரசாங்கத்தின் இலக்காக உள்ளது." - எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# சொத்து அறிக்கை சமர்ப்பிக்காத எம்.பிக்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 06

இலங்கையின் எம்.பிக்களின் சொத்து பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு கடந்த 30ஆம் திகதி முடிவடைந்த போதிலும், 175 எம்.பிக்களில் 80 பேர் இன்னும் தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்காத எம்.பிக்கள் மீது ஆணையகம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்று வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய ஆணையச் சட்டத்தின்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும் எம்.பிக்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கை கூடுதல் கட்டணமாக வசூலிக்கும் அதிகாரமும் ஆணையகத்திற்கு உள்ளது.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் வைத்திருக்கும் அனைத்து சொத்துக்களின் விவரங்களையும் சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கிடையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முந்தைய பாராளுமன்றத்தில் பணியாற்றிய பாராளுமன்ற ஊழியர்களில் பெரும்பாலோர் தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சம்பந்தப்பட்ட தலைவர்களிடம் சமர்ப்பிக்கவில்லை என்பது அறியப்படுகிறது.

(அ)

# நாணய நிதிய திட்டத்திலிருந்து விரைவில் வெளியே வருவோம்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, ஜுலை 06

சர்வதேச நாணய நிதியத் திட்டத்திலிருந்து வெளியே வருவோம் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தில் இருந்து கொண்டே அரச சேவையை பலப்படுத்த முடிந்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்துக்கு அனுபவமில்லை என பலர் குற்றம் சுமத்தினாலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையின் கீழ் எந்தவொரு சவாலையும் வெற்றிகொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் இணைந்து செயற்பட்டு வருகிறது.

2027ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கை இந்த திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளும்.

இந்த விடயத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானிக்கு நேரடியாகவே கூறியுள்ளார் - என்றார். (அ)

# ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான ஆரோக்கியமான பாடசாலைக்கான விருது யாழ். இந்துக் கல்லூரிக்கு




யாழ்ப்பாணம், ஜுலை 06

ஆசிய - பசுபிக் பிராந்தியத்திற்கான ஆரோக்கியமான பாடசாலைக்கான விருதினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் பங்கேற்ற 8,000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில், அக்ரிவ் லைவ்ஸ்ரைல் பிரிவில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

விருது வழங்கும் விழா கடந்த 3 ஆம் திகதி அன்று வியட்நாமின் டனாங்கில் நடைபெற்றது.

முன்னதாக, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி இலங்கையின் ஆரோக்கியமான பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு ஆசிய - பசுபிக் பிராந்திய போட்டியில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இலங்கைக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இதன் மூலம் பாடசாலைக்கு 3.5 மில்லியன் ரூபாய் பரிசுத்தொகையாக கிடைக்கப்பெற்றது. (அ)

# கோயிலில் விக்கிரகம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 06

நவாலி வடக்கு நாச்சிமார் ஆலயத்தில் இருந்த ஐம்பொன் எழுந்தருளி விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த திருட்டுக் கும்பல் விக்கிரகத்தை திருடிச் சென்றுள்ளது. குறித்த விக்கிரகத்தின் பெறுமதி சுமார் 10 இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விக்கிரகம் திருடப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 05 - 1934



மறைவு 04 - 07 - 2025

**சின்னையா கனகரட்ணம் (செட்டி)**

அரியாலை நாவலடியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னையா கனகரட்ணம் நேற்றுமுன்தினம் (04.07.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுதாகரன், மற்றும் செல்வமலர், றஜிந்தன், இராசமலர் சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை நாவலடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் தனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org